தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 230 ஆடி 11
Regd. No.CBE/090/2011-2013
கோவை, ஞாயிறு, ஜூலை 27, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## ஹிந்து கோவில் பிரச்சனை: தாய்லாந்துடனான போரை நிறுத்த கம்போடியா திடீர் அழைப்பு

.2-ம் பக்கம்

## 'ஆபரேஷன் சிந்தூர்' பாகிஸ்தானுக்கு சரியான செய்தியை அனுப்பி இருக்கும்: இந்திய ராணுவ தளபதி திட்டவட்டம்

...3-ம் பக்கம்

## 4-வது டெஸ்ட் போட்டி: முன்னிலை பெற்ற இங்கி., இந்திய அணி திணறல்

...6-ம் பக்கம்





தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள பிரதமர் நரேந்திரமோடியிடம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மனு அளித்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலாளர் நா.முருகானந்திடம் ஆலோசனை மேற்கொண்டு கோரிக்கை மனுவிற்கு ஒப்புதல் அளித்தார். இதில் பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி, முதலமைச்சரின் செயலாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழகத்திற்கான திட்டப்பணிகள் குறித்த கோரிக்கை மனு:

# பிரதமர் மோடியை சந்தித்து வழங்க முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்

### அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் வழங்குகிறார்

சென்னை, ஜூலை 27-

**தமிழகத்திற்கான பல்வேறு திட்டப் பணிகள் குறித்து பிரதமர் மோடியிடம் மனுவை வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதை அடுத்து பிரதமரை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்குகிறார்.**

**2 நாட்கள் பயணமாக...**

பிரதமர் மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று தமிழகம் வந்தார். மாலத்தீவில் இருந்து தனி விமானம் மூலம் தூத்துக்குடி வருகை தந்த பிரதமர் மோடி விமான நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். மேலும், விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார். மேலும், பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடக்கி வைத்தார். அதன் பின்னர் நேற்று இரவு திருச்சி செல்லும் பிரதமர் மோடி அங்கு தங்கினார். பின்னர், இன்று அரியலூரின் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு செல்லும் பிரதமர் மோடி அங்கு நடைபெறும் ஆடித்திருவாதிரை விழாவில் பங்கேற்கிறார்.

**கோரிக்கை மனு...**

> “மருத்துவமனையில் இருப்பதால், தமிழ்நாட்டிற்கு வரும் பிரதமரிடம் வழங்கவுள்ள கோரிக்கைகள் அடங்கிய மனுவைத் தலைமைச் செயலாளர் மூலமாகக் கொடுத்து அனுப்பியுள்ளேன். மனுவை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமரிடம் வழங்குவார்.”
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

இந்நிலையில், தமிழகம் வரும் பிரதமர் மோடியிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை மனு கொடுக்க உள்ளார். உடல்நலக்குறைவு காரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனையில் உள்ள நிலையில் அவர் சார்பில் கோரிக்கைகள் அடங்கிய மனுவை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமர் மோடியிடம் கொடுக்கிறார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த கோரிக்கை மனு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஒப்புதலுடன் பிரதமர் மோடியிடம் வழங்கப்பட உள்ளது.

**முதல்வர் ஆலோசனை...**

இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அரியலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு வருகை தரும் பிரதமர் மோடியிடம், தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து கோரிக்கை மனு அளித்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (26.7.2025) தலைமைச் செயலாளர் நா. முருகானந்தமிடம் ஆலோசனை மேற்கொண்டார். பின்னர், தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து அளிக்கப்பட வேண்டிய கோரிக்கை மனுவிற்கு ஒப்புதல் அளித்தார்.

**அமைச்சர் வழங்குகிறார்...**

இந்த மனுவினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமர் மோடியிடம் அளிக்க உள்ளார். இந்நிகழ்வின்போது, கனிமொழி எம்.பி. மற்றும் முதல்-அமைச்சரின் செயலாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரியலூரில் இன்று மாமன்னர் ராஜேந்திர சோழனின்

# ஆடி திருவாதிரை நிறைவு நாள் விழா: பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்பு

திருச்சி, ஜூலை 27-

**அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் இன்று மத்திய தொல்லியல்துறை சார்பாக மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை நிறைவு நாள் உள்ளிட்ட முப்பெரும் விழா நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி பங்கேற்று நினைவு நாணயத்தை வெளியிடுகிறார்.**

பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் சுற்றுப்பயணமாக நேற்று (சனிக்கிழமை) தூத்துக்குடி வந்தார். பின்னர் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர் தூத்துக்குடியில் இருந்து விமானம் மூலம் நேற்று இரவு 10:30 மணிக்கு திருச்சி வந்தார். பின்னர் விமான நிலையத்தில் இருந்து கார் மூலம் திருச்சி கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள கோர்ட் யார்டு மாரியாட் ஹோட்டலில் இரவு தங்கி ஓய்வு எடுத்தார். இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 11:30 மணியளவில் திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு செல்கிறார்.

அங்கு மத்திய அரசின் கலாச்சாரத்துறை அமைச்சகத்தின் சார்பில் நடைபெறும் மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை நிறைவு நாள் விழாவில் கலந்து கொள்கிறார். முன்னதாக இன்று காலை காரில் விமான நிலையம் செல்லும்போது, கோர்ட் யார்டு ஹோட்டலில் இருந்து மேஜர் சரவணன் ரவுண்டானா, எம்ஜிஆர் சிலை, நீதிமன்றம், பாரதிதாசன் சாலை, தலைமை தபால் நிலையம், குட் ஷெட் மேம்பாலம், டிவிஎஸ் டோல்கேட், புதுக்கோட்டை சாலை, விமான நிலையம் வரை சுமார் 8 கிலோமீட்டர் தொலைவிற்கு பிரதமர் மோடி ரோடு ஷோவாக சென்று மக்களை சந்திக்கிறார்.

பின்னர் விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டரில் கங்கைகொண்ட சோழபுரம் புறப்பட்டு செல்கிறார். அங்கு பைபாஸ் சாலையை ஒட்டி பொன்னேரி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் இறங்குகிறார். பின்னர் அங்கும் 1 கிலோ மீட்டர் தொலைவுக்கு விழா நடைபெறும் கங்கை கொண்ட சோழபுரம் கோவில் வரை ரோடு ஷோ மூலம் மக்களை சந்திக்கிறார். ரோடு ஷோ நடைபெறும் பகுதிகளில் இரும்பு பேரிக்கார்டுகள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ரோடு ஷோவில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்பதாக கூறப்படுகிறது. பிரதமர் தங்கும் ஓட்டலுக்கு 6 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. எல்பிஜி அதிகாரிகள், எல்.பி.ஜி. பாதுகாப்பு அதிகாரிகள், மத்திய தொழில் பாதுகாப்பு படையினர், தமிழக காவல்துறையினர், வெடிகுண்டு கண்டறியும் நிபுணர் குழுவினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் மத்திய மாநில அரசுகளின் உளவுத்துறை அதிகாரிகளும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி விமான நிலையம் முதல் பிரதமர் தங்கும் ஓட்டல் வரை செல்லும் பாதையில் பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது. மேலும் அரியலூர் கங்கைகொண்ட சோழபுரத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக முதலில் அமைக்கப்பட்ட பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்ட ஹெலிபேட் பொன்னேரி பகுதிக்கு மாற்றப்பட்டது.

அதேபோன்று முதலில் பிரதமர் மோடி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் உள்ள சுற்றுலா மாளிகையில் தங்குவதாக இருந்தது. அதுவும் பாதுகாப்பு காரணங்களால் கடைசி நேரத்தில் கலெக்டர் அலுவலகம் அருகாமையில் உள்ள தனியார் தங்கும் விடுதிக்கு மாற்றப்பட்டது. பிரதமர் வருகையை முன்னிட்டு திருச்சி மாநகர் மற்றும் அரியலூர் கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர்.

# கிட்னி திருட்டு விவகாரத்தில் கடும் நடவடிக்கை: அமைச்சர்

சென்னை, ஜூலை 27-

**கிட்னி திருட்டு விவகாரத்தில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் விடமாட்டோம். கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.**

சென்னை எழும்பூரில் தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: 2019 -ம் ஆண்டு நாமக்கல் மாவட்டத்தில் கட்னி திருட்டு நடந்த போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிட்னி திருட்டு தொடர்பாக மற்ற மருத்துவமனைகளில் ஆய்வு செய்ய வினித் ஐ.ஏ.எஸ். தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. முழுமையான விசாரணை அறிக்கை இன்னும் சில நாட்களில் வந்து விடும். கட்னி திருட்டு விவகாரத்தில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் விடமாட்டோம். கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### கர்நாடகா அணைகளில் நீர்திறப்பு அதிகரிப்பு:

# மேட்டூர் அணை 4-வது முறை முழுக்கொள்ளளவை எட்டியது

மேட்டூர், ஜூலை 27-

**நான்காவது முறையாக மேட்டூர் அணை முழுக் கொள்ளளவை எட்டியுள்ளது.**



காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்து கர்நாடகாவில் உள்ள அணைகள் நிரம்பின. இதனால் தமிழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகளவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கர்நாடகாவில் இருந்து அதிகப்படியான தண்ணீர் வரத்து காரணமாக மேட்டூர் அணை ஜூன் 28ஆம் தேதி நிரம்பியது. இதனால் உபரி நீர் முழுவதுமாக டெல்டா பகுதிக்கு திறந்துவிடப்பட்டது. எனினும், நீர்வரத்து அதிகரித்தே காணப்பட்டதால் அடுத்தடுத்து இரண்டு முறை மேட்டூர் அணை நிரம்பியது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை இந்த ஆண்டு நான்காவது முறையாக மேட்டூர் அணை முழுக் கொள்ளளவை எட்டியுள்ளது.

மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி முழுக் கொள்ளளவில் நீடிக்கிறது. அணையில் மொத்த நீர் இருப்பும் 93.47 டிஎம்சியாக உள்ளது. அதேபோல அணைக்கு வரும் தண்ணீரின் அளவு 25,400 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து 25,000 கன அடி தண்ணீர் காவிரி ஆற்றிலும், 400 கன அடி தண்ணீர் கால்வாய் வழியாகவும் திறந்துவிடப்பட்டு வருகிறது.

காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளான வயநாடு, தலைக்காவிரி உள்ளிட்ட இடங்களில் பெய்து வரும் மழையின் காரணமாக கிருஷ்ண ராஜ சாகர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு 35,966 ஆக உள்ள நிலையில், அணை முழுக் கொள்ளளவை எட்டிவிட்டதால் சுமார் 45,551 கன அடி தண்ணீர் தமிழகத்திற்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.

அதேபோல கபினி அணை முழுக் கொள்ளளவை எட்டிய நிலையில், 21,798 கன அடி தண்ணீர் வந்துகொண்டுள்ளது. அதில் 21,000 கன அடி அப்படியே உபரி நீராக தமிழகத்திற்கு திறக்கப்பட்டு வருகிறது.

# டெல்லியில் 30-ம் தேதி கூடுகிறது காவிரி மேலாண்மை ஆணையம்

### 4 மாநிலங்களின் அதிகாரிகள் பங்கேற்பு

புதுடெல்லி, ஜூலை 27-

**டெல்லியில் 30-ம் தேதி கூடுகிறது காவிரி மேலாண்மை ஆணையம் கூடுகிறது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநில அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.**

தமிழகம், கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கு இடையில் உள்ள காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண காவிரி மேலாண்மை ஆணையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தொடர்ச்சியாக ஆணையத்தின் சார்பில் அடுத்தடுத்து கூட்டங்கள் நடத்தப்பட்டு தொடர்புடைய மாநிலங்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 41 கூட்டங்கள் நடந்து முடிந்திருக்கிறது.

இந்த நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் 42-வது கூட்டம் டெல்லியில் உள்ள அலுவலகத்தில் அதன் தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் வருகிற 30-ம் தேதி கூடுகிறது. கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநில அதிகாரிகள் பங்கேற்கின்றனர். கர்நாடகாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு திறக்கப்படும் நீர் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது. சுப்ரீம்கோர்ட் தீர்ப்பின்படி, ஜூலை மாதத்திற்கு 31.24 டி.எம்.சி. நீரை கர்நாடகா திறந்துவிட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### 26-ம் ஆண்டு கார்கில் வெற்றி தினம்:

# உயிர்தியாகம் செய்த வீரர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி

புதுடெல்லி, ஜூலை 27-

**கார்கில் வெற்றி தினத்தின் 26-வது ஆண்டு நினைவு நாளில், போரில் உயிர்தியாகம் செய்த வீரர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.**

கடந்த 1999-ல் பாகிஸ்தானுடன் நடந்த கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்றது. இதன் வெற்றி தினம் ஆண்டுதோறும் ஜூலை 26-ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. கார்கில் போரில் உயிர்த் தியாகம் செய்த ராணுவ வீரர்களை நினைவு கூரும் வகையிலும், உயிரோடு இருக்கும் கார்கில் போர் வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் நேற்று 26-வது ஆண்டாக கார்கில் வெற்றி தினம் 'கார்கில் விஜய் திவாஸ்' என்ற பெயரில் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

கார்கில் வெற்றி நாளையொட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “கார்கில் வெற்றி நாளில், நமது தாய்மண்ணை ஈடு இணையற்ற மனவுறுதியுடன் காத்து, உயிர்நீத்த துணிச்சல்மிகு ராணுவ வீரர்களுக்கு என் வீரவணக்கங்கள். அவர்களது தீரமும், தியாகமும் என்றும் நம் நினைவை விட்டு நீங்காது’ எனத் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி, கோவை மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 27-

**தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் இன்று (ஜூலை 27) மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், கரையை கடந்து, மேற்கு வங்க கடலோரப் பகுதியில் நிலவுகிறது. மகாராஷ்டிரா - கேரள கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் அரபிக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஜூலை 31-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 28-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும். இன்று (ஜூலை 27) நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.


இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -721.08 | -225.10 |
| பாயிண்ட் 81,463.09 | பாயிண்ட் 24,837.00 |



**தங்கம்** 1 சவரன் ₹73,280; 1 கிராம் ₹9,160



**வெள்ளி** 1 கிலோ ₹126,000; 1 கிராம் ₹126.00

**டாலர்** ₹86.46

**பெட்ரோல்** ₹102.63; **டீசல்** ₹94.24

### ஹிந்து கோவிலால் வந்த பிரச்சனை:

# தாய்லாந்துடன் போரை நிறுத்த திடீர் அழைப்பு விடுத்த கம்போடியா



**தாய்லாந்த், ஜூலை 27-**

தாய்லாந்து நாடுடனான போரை முடிவுக்குக் கொண்டுவர, போர்நிறுத்தத்துக்கு கம்போடியா அழைப்பு விடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து - கம்போடியா இடையில் நீண்ட காலமாக எல்லைப் பிரச்னை இருந்து வருகிறது. இந்த நிலையில், வியாழக்கிழமையில் இரு நாட்டு எல்லைகளிலும் வெடித்த மோதலால் போர்ப்பதற்றம் நிலவி வருகிறது. இந்த மோதலால் 30-க்கும் மேற்பட்டோர் பலியானதுடன், லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்ததால், போர்நிறுத்தம் கோரி கம்போடியா அழைப்பு விடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தாய்லாந்து - கம்போடியா ஆகிய இரு நாடுகளும் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்த எல்லைப் பகுதியில்தான், தாய்லாந்தின் சுரின் என்ற மாகாணமும், கம்போடியாவின் ஒட்டார் மீஞ்சே என்ற மாகாணமும் அமைந்துள்ளது. ஆனால், தாய்லாந்து நாட்டின் சுரீன் மாகாணத்தில் உள்ள பிரசாத் தா மோன் தோம் என்ற கோவில், தங்கள் நாட்டுடைய கோவில் என்று கம்போடியா சொந்தம் கொண்டாடுவதே, அண்டை நாடுகளுக்குள் சண்டை வருவதற்குக் காரணமாக உள்ளது.

இந்த கோவில் விவகாரம் அவ்வப்போது சூடுபிடித்து, இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் பதற்றம் தொற்றிக் கொள்ளும். அந்த நிலையில்தான், கம்போடியா படைகள் தாய்லாந்துக்குள் அத்துமீறி நுழைந்ததாகக் குற்றம்சாட்டி, கம்போடியா மீது ஜெட் விமானங்களைக் கொண்டு வெடிகுண்டுகளை வீசின. இந்த போர்ப் பதற்றம் குறித்து சர்வதேச நாடுகளும் கவலை தெரிவித்த நிலையில், போர்நிறுத்தத்துக்கு கம்போடியா அழைப்பு விடுத்ததாகத் தெரிகிறது.

போர்ப் பதற்றம் மற்றும் இந்த சண்டை காரணமாக, கம்போடியா -தாய்லாந்து இடையேயான எல்லைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த எல்லைத் தாண்டிய தாக்குதல் காரணமாக, இரு நாட்டு எல்லைப் பகுதிகளில் வணிகம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

# இத்தாலி: நெடுஞ்சாலையில் விழுந்து நொறுங்கிய விமானம்

**இத்தாலியா, ஜூலை 27-**

இத்தாலியா நெடுஞ்சாலையில் விமானம் விழுந்து நொறுங்கியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இத்தாலியின் வடக்கு பகுதியில் உள்ள ப்ரெஷியா நகரத்தில் ஒரு பரபரப்பான நெடுஞ்சாலையில் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியுள்ளது. இந்த விபத்தில், மிலனைச் சேர்ந்த 75 வயதான வழக்கறிஞர் செர்ஜியோ ரவாக்லியா மற்றும் அவரது 60 வயதான தோழி ஆன் மரியா டி ஸ்டெஃபானோ ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.

ப்ரீசியா ஆர்.ஜி. மாடல் இலகுரக விமானம் கட்டுப்பாட்டை இழந்து நெடுஞ்சாலையில் விழுந்ததால் தீப்பிடித்து எரிந்தது, இதனால் அப்பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது. இந்த விபத்தைப் பதிவு செய்த சிசிடிவி காட்சிகள் வெளியாகியுள்ளன. நெடுஞ்சாலையில் சென்ற சில வாகனங்களும் தீயில் சிக்கி எரிந்தன, அதில் இரண்டு வாகன ஓட்டிகள் காயமடைந்தனர். விமானத்தை அவசரமாக தரையிறக்க முயன்ற போது கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என்று இத்தாலி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பெரு நாட்டில் விபத்து - 18 பேர் பலி

**லிமா, ஜூலை 27-**

பெரு நாட்டில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 18 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்கா கண்டத்தின் மேற்கில் அமைந்துள்ளது பெரு . இந்த நாட்டின் டர்மா மாகாணத்தில் இரண்டு அடுக்கு சொகுசு பஸ் ஒன்று நேற்று முன்தினம் தலைநகர் லிமாவிலிருந்து காட்டு நகரமான லா மெர்சிடிற்கு 60க்கும் மேற்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்தது.

டால்கா மாவட்டத்திற்கு அருகில் வளைந்து நெளிந்து செல்லும் குறுகிய சாலையில் பஸ் சென்றுகொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் நிலைதடுமாறி சாலை அருகே உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 24 பேர் காயமடைந்தனர்.

### விழாக்கோலம் பூண்ட தூத்துக்குடி:

# பனிமயமாதா ஆலய பெருவிழா கொடியேற்றத்துடன் துவக்கம்



**தூத்துக்குடி, ஜூலை 27-**

தூத்துக்குடி பனிமய மாதா ஆலய பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தூத்துக்குடி தூய பனிமய மாதா ஆலயத்தில் 443-வது ஆண்டு பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. காலை 7 மணியளவில் தூத்துக்குடி மறைமாவட்ட பிஷப் ஸ்டீபன் தலைமையில் கூட்டுத் திருப்பலி நடந்தது. இந்த திருப்பலி முடிந்ததும் கொடியேற்ற விழா கோலாகலமாக நடைபெற்றது. பனிமய மாதா உருவம் பொறித்த கொடி ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு பேராலயம் எதிரே உள்ள கொடிமரத்தில் ஏற்றப்பட்டது.

அப்போது அங்கு கூடியுருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் 'மரியே வாழ்க' என விண்ணை பிளக்க முழக்கமிட்டனர். பின்னர் சமாதானச் சின்னமாக வெள்ளை புறாக்கள் பறக்க விடப்பட்டன. தொடர்ந்து, பனிமய மாதா சொரூபத்துக்கு பொன் மகுடம் மற்றும் ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டுள்ளன. இந்த திருவிழா 10 நாட்கள் நடைபெற உள்ளது. திருவிழா நாட்களில் தினமும் ஜெபமாலை, திருப்பலி, மறையுரை, நற்கருணை ஆசீர் ஆகிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இந்த திருவிழாவையொட்டி 1,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இந்த திருவிழாவை முன்னிட்டு தூத்துக்குடி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

### தாய்லாந்து-கம்போடியா மோதல்:

# இந்தியர்களுக்கு உதவி எண்கள் அறிவிப்பு

**நாம்பென், ஜூலை 27-**

தாய்லாந்து-கம்போடியா இடையேயான சண்டை, உச்சக்கட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ள நிலையில், இந்தியர்களுக்கான அவசர தொலைபேசி எண்களை தூதரகம் வெளியிட்டு உள்ளது.

சர்ச்சைக்குரிய கோவில் பகுதியை மையமாக கொண்டு, கம்போடியா, தாய்லாந்து நாடுகள் இடையே மோதல் மூண்டுள்ளது. சர்வதேச நாடுகளை கவலையில் ஆழ்த்தி உள்ள இந்த சண்டையால் இதுவரை 32 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்து உள்ளனர்.

தொடர்ந்து மோதல் உக்கிரமான கட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்து உள்ளதால், கம்போடியாவில் உள்ள 7 மாகாணங்களின் எல்லை பகுதிகளுக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டு உள்ளது. இதற்கான அறிவிப்பை அங்குள்ள இந்திய தூதரகம் வெளியிட்டு இருக்கிறது.

இந்நிலையில், இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பில், கம்போடியா-தாய்லாந்து நாடுகள் இடையேயான மோதல் காரணமாக, எல்லைப் பகுதிகளில் பயணம் செய்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும். ஏதேனும், அவசர உதவி தேவைப்படும் பட்சத்தில் +855 92881676 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கலாம். மேலும் cons.phnompenh@mea.gov.in. என்ற இமெயில் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜம்மு காஷ்மீரில் நிலநடுக்கம்

**ஸ்ரீநகர், ஜூலை 26-**

ஜம்மு காஷ்மீரில் ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜம்மு-காஷ்மீரின் உள்ள தோடா பகுதியில் நேற்று திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 9.30 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 33.00 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 76.14 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

# ஈரானில் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல்; 8 பேர் பலி

**டெஹ்ரான், ஜூலை 27-**

ஈரானில் நீதித்துறை கட்டடத்தின் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் பலத்த காயமுற்றனர்.

ஈரானின் ஜஹேதானில் உள்ள நீதித்துறை கட்டடத்தின் மீது ஜெய்ஷ் அல்-அதில் பயங்கரவாதிகள் திடீரென சரமாரி தாக்குதல் நடத்தி உள்ளனர். இந்த தாக்குதலில் சம்பவ இடத்திலேயே எட்டு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பலத்த காயமுற்றனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு, ஜெய்ஷ் அல்-அதில் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. நீதிமன்றத்தைச் சுற்றி துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிச்சத்தங்கள் கேட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து நீதித்துறை தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மத்திய ஜாஹேதானில் உள்ள நீதித்துறை வளாகத்திற்குள் உள்ள நீதிபதிகளின் அறைக்குள் துப்பாக்கிதாரிகள் நுழைந்தனர். அவர்கள் சரமாரி தாக்குதல் நடத்தியதில் நீதிபதிகள் 13 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாலத்தீவுக்கு இந்தியா ஆதரவு:

# அதிபர் முகமது முய்சு நன்றி

**மாலி, ஜூலை 27-**

மாலத்தீவுக்கு இந்தியா அரசு அளித்து வரும் ஆதரவுக்கும் உறுதியான நப்புக்கும் நன்றி என முகமது முய்சு கூறினார்.

பிரதமர் மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணமாக மாலத்தீவு சென்றுள்ளார். மாலத்தீவு அதிபர் முகமது முய்சு விமான நிலையத்திற்கு நேரில் சென்று பிரதமர் மோடியை வரவேற்றார். தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். நேற்று நடைபெற்ற மாலத்தீவின் 60-வது சுதந்திர தின விழாவில் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

இதனிடையே, மாலத்தீவுக்கு இந்தியா ரூ.4,850 கோடி கடன் வழங்க உள்ளதாக பிரதமர் மோடி அறிவித்தார். மேலும், இந்தியா-மாலத்தீவு இடையே இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு இரு நாட்டு அரசுகளும் முயற்சி செய்யும் என்றும், தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், 'இந்தியா-மாலத்தீவு இடையே உறுதியான பிணைப்பு உள்ளது' என மாலத்தீவு அதிபர் முகமது முய்சு தெரிவித்துள்ளார். பிரதமர் மோடியின் வருகையையொட்டி நடைபெற்ற அரசு விருந்தின்போது, மாலத்தீவுக்கு இந்திய அரசு அளித்து வரும் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் உறுதியான நட்புக்கு நன்றி தெரிவிப்பதாக முகமது முய்சு கூறினார். தொடர்ந்து அவர் பேசியதாவது;-

மாலத்தீவு மற்றும் இந்தியா இடையேயான நீண்டகால உறவுகளுக்கு இந்தியப் பெருங்கடல் ஒரு உயிருள்ள சான்றாகும். இரு நாடுகளும் ராஜதந்திரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நெகிழ்ச்சியான மற்றும் உடைக்க முடியாத உறுதியான பிணைப்பு உள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் துடிப்பான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும், இளைஞர்களை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மாலத்தீவு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இந்த லட்சியங்களை நனவாக்குவதில் இந்தியாவின் கூட்டாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாறு முகமது முய்சு தெரிவித்துள்ளார்.

**27-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** உறவுகளாலும், உடனிருக்கும் பெண்களாலும் தொல்லைகள் ஏற்படும். வாழ்க்கையில் புதுத் திருப்பங்களால் கீழான நிலை ஏற்படலாம். உங்கள் திறமை பாராட்டப்படும். பயணத்தில் தடைகள் ஏற்படும்.

**ரிஷபம்:-** நினைத்தபடி எதுவும் நடக்காது. வீட்டில் களவு போவதை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். ஒரு வித பயம் கலந்த உணர்வு இருக்கும். பண இழப்புக்களால் தாக்கம் குறையும்.

**மிதுனம்:-** பணம் சம்பாதிப்பதில் ஊக்கம் ஏற்படும். சாகசம் புரிவீர்கள். பிறர் உதவியை நாட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்து அசத்துவார்கள். காரிய அனுகூலம் உண்டு.

**கடகம்:-** பண விஷயமான சிந்தனைகளே, இன்று உங்கள் மனதில் மேலிடும். கோபத்தை அடக்கி குணமா இருந்தால் நிம்மதி பிறக்கும். சகோதர வகையில் சமாதானமாகப் போனால் நல்லது.

**சிம்மம்:-** உங்களுக்கு மேலானவர்களை சந்திக்கும் எண்ணம் ஈடேறும். நல்லுணவு, மற்றும் நல்ல நண்பன் சேர்க்கை உண்டு. பெண்களால் மன மகிழ்ச்சி அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் சென்று இலாபத்தை அள்ளுவார்கள்.

**கன்னி:-** வேலைப்பளு காரணமாக வேளாவேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். ஆறுவது சினம் என்றபடி முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**துலாம்:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். அதிகாரப் பதவி கிடைக்கும். பரிசுப் பொருட்கள் மற்றும் அன்பளிப்புகளை அடைவீர்கள். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். விருந்தினர் வருகை மனமகிழ்ச்சி தரும். சொற்பொழிவுத் திறனால் மேடைப் பேச்சு மிளிரும். போட்டி, பந்தயங்களில் கிடைக்கும் வெற்றி பாராட்டுக்கள் சேர்க்கும்.

**தனுசு:-** தாயார் மூலம் அனுகூலமான பலன்கள் உண்டு. இறை வழிபாடு செய்வதாலும், பெரியவர்கள் ஆசியாலும் அனைத்தும் நல்லபடியாக நடக்கும். ஸ்திரீ வகை இலாபமும், பயணத்தில் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**மகரம்:-** கோபத்தை அடக்கி, வார்த்தைகள் அளவோடு பேசவும். வண்டி வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். தெய்வப் பிரார்த்தனைகள் மூலம் தெளிவு பெற வேண்டிய நாள்.

**கும்பம்:-** தனவரவு, கௌரவப் பட்டம், பதவி, சுபகாரிய சித்தி, புத்திர பாக்கியம் ஆகியவை ஏற்படும் நாள். தொழில் வழி வருமானம் ஏற்படும். தங்கள் பணியை பொருத்து மேலதிகாரிகளின் ஆதரவு மேன்மையை அளிக்கும்.

**மீனம்:-** புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். சினிமா போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகள் ஈடுபாட்டால் உள்ளம் மகிழும். புதிய பெண்களின் நட்பு பெருமை கொள்வீர்கள். வியாபாரிகள் அதிக இலாபம் அடைவர்.

### பீகாரில் விநோத சம்பவம்:

# பாம்பை கடித்து கொன்ற குழந்தை

**பாட்னா, ஜூலை 27-**

பீகாரில் நாகப்பாம்பை ஒரு வயது குழந்தை கடித்து கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பாம்பு தீண்டியதில் உடல் நிலை பாதிக்கப்பட்ட குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பீகார் மாநிலம் பெட்டியாவில் கோவிந்த என்ற குழந்தை, தனது வீட்டின் அருகே விளையாடிக்கொண்டிருந்தது. அப்போது அங்கு ஒரு நாகப்பாம்பு திடீரென வந்து குழந்தை அருகே வந்தது. அந்த நாகப்பாம்பு குழந்தையின் கைகளில் சிக்கிய நிலையில் , அதை கையில் பிடித்து எடுத்து கடித்தநிலையில் அந்த நாகப்பாம்பு அந்த இடத்திலேயே இறந்தது.

சில மணி நேரம் கழித்து, அந்த குழந்தையின் உடல் நிலை மோசமடையத் தொடங்கியது. அவரது குடும்பத்தினர், முதலில் அவரை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு அழைத்துச் சென்றனர், பின்னர் அங்கிருந்து பெட்டியாவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

அதை தொடர்ந்து குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு கண்காணிப்பில் உள்ளது.

### கொரில்லா தாக்குதல்:

# பலூசிஸ்தானில் 23 வீரர்கள் பலி

**பலூசிஸ்தான்,ஜூலை 27-**

பலூசிஸ்தானில் கொரில்லா தாக்கியதில் அதிகாரி உள்பட 23 வீரர்கள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் பலூசிஸ்தான் விடுதலை படை என்ற பெயரிலான புரட்சி படையினர் பல்வேறு பகுதிகளில் தொடர் கொரில்லா தாக்குதலில் நேற்று ஈடுபட்டனர்.

இதில், பாகிஸ்தான் ராணுவத்தினர் 23 பேர் பலியாகி உள்ளனர். அவர்களில், உயர்மட்ட அதிகாரி ஒருவரும் அடங்குவார். இந்த கொரில்லா தாக்குதலில் ராணுவ கட்டமைப்புகளும் மற்றும் நுண்ணறிவு பிரிவுடன் தொடர்புடைய கட்டமைப்புகளும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளன.

பலூசிஸ்தானின் குவெட்டா, கலாத், மஸ்தங், ஜமுரான் உள்ளிட்ட பகுதிகளில் அமைந்த பாகிஸ்தானிய படையின் இடங்களிலும் மற்றும் நுஷ்கி, தல்பந்தின் மற்றும் பாஞ்ச்குர் பகுதிகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன.

இதுபற்றி புரட்சி படை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், பலூச் தேசிய விடுதலையை அடையும் வரை ஆயுத போராட்டம் தொடரும் என்ற உறுதிமொழியை மீண்டும் உறுதி செய்கிறோம் என தெரிவித்து உள்ளது. பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்டு வரும் ராணுவ நடவடிக்கைகளுக்கு பதிலடியாக தங்களுடைய போராளிகளும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவார்கள் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### கேதார்நாத் யாத்திரையில் நிலச்சரிவு:

# 100 யாத்ரீகர்களை மீட்ட மீட்பு படை

**புதுடில்லி, ஜூலை 27-**

கேதார்நாத் யாத்திரையின் போது நிலச்சரிவில் சிக்கி தவித்த யாத்ரீகர்கள் 100 பேரை பத்திரமாக மீட்ட மீட்பு படையினரை பல்வேறு தரப்பினர் வெகுவாக பாராட்டி உள்ளனர்.

கடந்த மே 2-ம் தேதி முதல் கேதார்நாத் புனித யாத்திரை பயணம் தொடங்கி நடந்து வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் புனித பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் யாத்ரீகர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய பொதுப்பணி துறை அதிகாரிகள் மற்றும் மீட்பு படையினர் 24 மணி நேரமும் சிரமம் பார்க்காமல் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

இந்த சூழலில், சோன்பிரயாக் அருகே ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, கேதார்நாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளது. இந்நிலையில், சோன்பிரயாக் பகுதியில் சிக்கி தவித்த யாத்ரீகர்கள் 100 பேரை பத்திரமாக மீட்பு படையினர் மீட்டனர். யாத்ரீகர்கள் 100 பேரும் நலமாக இருக்கின்றனர் என்பதை துணை கமிஷனர் ஆஷிஷ் திம்ரி உறுதி செய்தார். தக்க நேரத்தில், சாதுர்யமாக செயல்பட்ட மீட்பு படையினரை பல்வேறு தரப்பினர் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

# பிரேமலதா சுற்றுப்பயணத்துக்கு அனுமதி கோரி எல்.கே.சுதீஷ் மனு

**சென்னை, ஜூலை 27-**

தமிழக டி.ஜி.பி.யிடம் தே.மு.தி.க. சார்பில் பிரேமலதா சுற்றுப்பயணத்துக்கு அனுமதி கோரி எல்.கே..சுதீஷ் மனு அளித்துள்ளார்.

தமிழக டி.ஜி.பி.யிடம் தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:- தே.மு.தி.க. சார்பில் மாநில அளவிலான பிரசாரம் வருகிற 3-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இதற்காக மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் படம் பொருந்திய திறந்த நிலை கேரவன் வாகனத்தை பயன்படுத்த உள்ளோம்.

இந்த பிரசாரமானது போலீசாரின் வழிகாட்டுதல்களோடு மக்களிடையே அமைதி, ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும். இதற்காக கட்சி தரப்பில் இருந்து நிர்வாகிகளின் ஒத்துழைப்பு போலீசாருக்கு முழுமையாக வழங்கப்படும் என உறுதி அளிக்கிறேன். எனவே தே.மு.தி.க.வின் பிரசாரத்துக்கு அனுமதி வழங்கி, பிரசாரத்தின்போது பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டிராக்டர் கவிழ்ந்து உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**ராமநாதபுரம், ஜூலை 27-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த 3 பேருக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவித்துள்ளார்.

இது குறித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே கூட்டம் கிராமத்தைச் சேர்ந்த 15 நபர்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் ரேசன் கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டு டிராக்டரில், வெற்றிமாலை கண்மாய் கரையருகில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக டிராக்டர் கண்மாய் கரையில் உள்ள சாலையில் இருந்து கண்மாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த பொன்னம்மாள் (68) ராக்கி (62), முனியம்மாள் (55) ஆகிய மூன்று பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 8 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 25 ஓ.டி.டி. தளங்களுக்கு தடை

**புதுடெல்லி, ஜூலை 27-**

25 ஓ.டி.டி. தளங்களுக்கு மத்திய அரசு தடை விதித்து உள்ளது. ஓ.டி.டி. தளங்களில் சில ஆபாசம் மற்றும் அருவருக்கத்தக்க காட்சிகள் அடங்கிய படங்கள் மற்றும் தொடர்களை வெளியிடுகின்றன. இதனால் குழந்தைகள் மற்றும் சிறுவர்-சிறுமியரின் எதிர்காலம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே இத்தகைய ஓ.டி.டி. தளங்களை முடக்கியும், தடை விதித்தும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் தற்போதும் 25 ஓ.டி.டி. தளங்களுக்கு மத்திய அரசு தடை விதித்து உள்ளது. இந்த தளங்களின் இணையதளங்கள் மற்றும் செல்போன் செயலிகளை முடக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதன்படி ஆல்ட், உல்லு, பிக் ஷாட்ஸ், டெசிபிளிக்ஸ் உள்பட 25 ஓ.டி.டி. தளங்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளன. அரசின் தடைக்கு உள்ளாக்கப்பட்டு உள்ள மேற்படி 25 ஓ.டி.டி. தளங்கள் நீண்ட காலமாக மறைமுகமான பாலியல் வார்த்தைகள், சமூக சூழலில் எந்தவித கதைக்களமோ, கருப்பொருளோ அல்லது செய்தியும் இல்லாத வெளிப்படையான பாலியல் காட்சிகளை ஒளிபரப்பி வந்ததாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக கடந்த செப்டம்பர் மாதம் மேற்படி தளங்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியும் அவை கண்டுகொள்ளவில்லை என்றும் அவர்கள் கூறினர். தற்போது தடை செய்யப்பட்டுள்ள ஓ.டி.டி. தளங்களில் 5 நிறுவனங்கள், ஏற்கனவே தடை செய்யப்பட்டு வேறு பெயரில் இயங்கி வந்தவை என்றும் கண்டறியப்பட்டு உள்ளன.

## நம்பிக்கையான உலக தலைவர்கள்:

# பிரதமர் மோடி முதலிடம்

**புதுடெல்லி, ஜூலை 27-**



உலகின் நம்பிக்கையான தலைவர்கள் பட்டியலில் பிரதமர் மோடி முதல் இடத்தை பிடித்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த வணிக நுண்ணறிவு நிறுவனமான 'மார்னிங் கன்சல்ட்', கடந்த 4-ந்தேதி முதல் 10-ந்தேதி வரை பல்வேறு தரவுகளின் அடிப்படையில் 'உலக அளவில் நம்பிக்கை வாய்ந்த தலைவர்கள் யார்?' என்பது தொடர்பான ஆய்வு ஒன்றை நடத்தியது.

அந்த ஆய்வில், ஒரு தலைவருக்கு அவரது நாட்டில் எவ்வளவு மதிப்பு இருக்கிறது? உலக அளவில் அந்த தலைவருக்கு எவ்வளவு மரியாதை உள்ளது? ஒரு தலைவர் எந்த அளவு நம்பகத்தன்மையுடன் நடந்து கொள்கிறார்? என்பன உள்ளிட்ட பல வேறு மதிப்பீடுகள் கணக்கில் கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வின் முடிவில், நம்பிக்கையான உலக தலைவர்களின் பட்டியலில் முதல் 8 இடங்களை பிடித்த தலைவர்களின் பெயர்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, உலகின் நம்பிக்கையான தலைவர்கள் பட்டியலில் பிரதமர் மோடி முதல் இடத்தை பிடித்துள்ளார். அவர் 100 மதிப்பெண்களுக்கு 75 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

அவரை தொடர்ந்து 59 மதிப்பெண்களுடன் தென் கொரியாவின் அதிபர் லீ ஜோ மியுங்க் 2-வது இடத்தில் உள்ளார். அர்ஜெண்டினா அதிபர் ஜேவியர் 57 மதிப்பெண்களுடன் 3-வது இடத்தை பிடித்துள்ளார்.

இந்த பட்டியலில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் 44 மதிப்பெண்களுடன் 8-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்த ஆய்வு அறிக்கையை பா.ஜ.க. தலைவர்கள் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டு மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

# 'ஆபரேஷன் சிந்தூர்' பாகிஸ்தானுக்கு சரியான செய்தியை அனுப்பி இருக்கும்

## இந்திய ராணுவ தளபதி தகவல்



**ஸ்ரீநகர், ஜூலை 27-**

ஆபரேஷன் சிந்தூர் பாகிஸ்தானுக்கு சரியான செய்தியை அனுப்பி இருக்கும் என்று ராணுவ தளபதி உபேந்திர திவேதி தெரிவித்துள்ளார்.

1999ம் ஆண்டு பாகிஸ்தானுடன் நடந்த கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்றதை கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26ம் தேதி கார்கில் வெற்றி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்று கார்கில் வெற்றி தினம் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீரின் கார்கிலில் அமைக்கப்பட்டுள்ள கார்கில் நினைவு தூணில் போரில் வீரமரணமடைந்த வீரர்களுக்கு ராணுவ தளபதி உபேந்திர திவேதி நேற்று மரியாதை செலுத்தினார். இதனை தொடர்ந்து பேசிய ராணுவ தளபதி, இந்தியாவிற்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் சக்திகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், பஹல்காம் தாக்குதலுக்கு இந்தியா கொடுத்த பதிலடிதான் ஆபரேஷன் சிந்தூர். இது பாகிஸ்தானுக்கு சரியான செய்தியை அனுப்பி இருக்கும். நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கை, அரசு வழங்கிய அனுமதியை தொடர்ந்து இந்தியா தக்க சர்ஜிகல் பதிலடியை கொடுத்தது. இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை, மக்களுக்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் சக்திகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்' என்றார்.

# காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லை: இ.பி.எஸ். குற்றச்சாட்டு

**சென்னை, ஜூலை 27-**



தமிழகத்தில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், சென்னை எழும்பூரில் கடந்த ஜூலை 18 அன்று தாக்குதலுக்கு ஆளாகிய ஆயுதப் படை எஸ்.ஐ. ராஜராஜன், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஒரு காவல்துறை உதவி ஆய்வாளர் தாக்குதலுக்கு ஆளாகி, உயிரிழந்துள்ளது என்பது தி.மு.க. ஆட்சியில் காவல் துறையினருக்கே பாதுகாப்பு இல்லை என்ற அளவிற்கு சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதை மீண்டும் மெய்ப்பிக்கிறது.

எஸ்.ஐ. ராஜராஜன் கொலை வழக்கில் நேர்மையான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வுக்கு பிறகு எந்த அரசு பதவியையும் ஏற்க மாட்டேன்

## தலைமை நீதிபதி கவாய் திட்டவட்டம்

**மும்பை, ஜூலை 27-**



'ஓய்வுக்குப் பின் எந்த அரசு பதவியையும் ஏற்க மாட்டேன்' என சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கவாய் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்டிராவின் அமராவதி மாவட்டத்தில் உள்ள தனது சொந்த கிராமமான தாராபூரில், நடந்த நிகழ்ச்சியில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கவாய் பேசியதாவது: தனது சொந்த கிராமத்தில் தலைமை நீதிபதியாக அல்ல, சொந்த மாவட்டத்தில் வசிப்பவன் போல் இருக்கிறேன். ஓய்வுக்குப் பிறகு எனக்கு அதிக நேரம் கிடைக்கும், எனவே தாராபூர், அமராவதி மற்றும் நாக்பூரில் அதிக நேரம் செலவிட முயற்சிப்பேன். மக்களுக்கு எளிதில் நீதி கிடைக்க வேண்டும். நீதிபதி நியமனங்களை விரைவுபடுத்த மத்திய அரசிடம் வலியுறுத்த முயற்சி செய்து வருகின்றேன். இவ்வாறு அவர் பேசினார்.

கேரளா மற்றும் பீகார் கவர்னராக பணியாற்றிய தனது தந்தை ஆர்.எஸ். கவாயின் 10வது நினைவு தினத்தை யொட்டி, அவர் தனது சொந்த கிராமத்தில் ஒரு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டார். அப்போது தான், வரும் நவம்பர் மாதம் ஓய்வு பெற உள்ள சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கவாய் ஓய்வுக்குப் பிறகு உள்ள திட்டங்களை வெளிப்படையாக பேசி இருக்கிறார்.

# பாகிஸ்தான் கேட்டதாலேயே சண்டை நிறுத்தம்: மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, ஜூலை 27-**

பாகிஸ்தான் கேட்டதால் சண்டை நிறுத்தம் ஏற்பட்டதாக பாராளுமன்றத்தில் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21-ந்தேதி தொடங்கியது. ஆனால் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம், ஆபரேஷன் சிந்தூர் உள்ளிட்ட பிரச்சினைகளால் முதல் நாளிலிருந்தே இரு அவைகளும் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில், பாராளுமன்ற மக்களவை கேள்வி நேரத்தில், இந்தியா-பாகிஸ்தான் இடையிலான சண்டை நிறுத்தத்துக்கு அமெரிக்காவின் தலையீடு காரணமா? என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்த்தன் சிங் பதில் அளித்து கூறியதாவது:- சண்டை தொடங்கிய மறுநாளிலேயே இந்தியாவின் முழு நோக்கம் நிறைவேறி விட்டது. பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதன்பேரில், இந்தியா-பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குனர்கள் நேரடியாக தொடர்பு கொண்டு பேசினர். அதில், சண்டை நிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டது. பாகிஸ்தானுடனான அனைத்து பிரச்சினைகளையும் இருதரப்பாக பேசி தீர்வு காண்போம் என்று அமெரிக்க ஜனாதிபதியிடம் பிரதமர் மோடி தெளிவாக தெரிவித்து விட்டார். இதேநிலைப்பாடு, அனைத்து நாடுகளிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# அமர்நாத் யாத்திரை: இதுவரை 3.60 லட்சம் பக்தர்கள் தரிசனம்

**ஸ்ரீநகர், ஜூலை 27-**

அமர்நாத் யாத்திரை தொடங்கியதில் இருந்து இதுவரை 3 லட்சத்து 60 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

ஜம்மு- காஷ்மீரில் இமய மலையில் உள்ள அமர்நாத் குகைப்பகுதியில் இந்து மதக் கடவுள் சிவன் கோவில் உள்ளது.

பனிசூழ்ந்த மலையில் இயற்கையாக உருவாகும் பனி லிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் யாத்திரையாக சென்று வருகின்றனர்.

இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை கடந்த 3-ம் தேதி தொடங்கியது.

யாத்திரை தொடங்கிய நாள் முதல் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், நடப்பு ஆண்டு அமர்நாத் யாத்திரை தொடங்கியது முதல் தற்போதுவரை 3 லட்சத்து 60 ஆயிரம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, நேற்று அதிகாலை மேலும் 2 ஆயிரத்து 324 பேர் அமர்நாத் யாத்திரை மூலம் பனி லிங்கத்தை தரிசனம் செய்ய சென்றுள்ளனர்.

அதேவேளை, நடப்பு ஆண்டு அமர்நாத் யாத்திரை வரும் 9ம் தேதி வரை நடைபெற உள்ள நிலையில் பனி லிங்கத்தை தரிசிக்க இன்னும் அதிக அளவில் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அமர்நாத் யாத்திரையில் 5.10 லட்சம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுமி பாலியல் வழக்கில் கைதான இளைஞர் பரபரப்பு வாக்குமூலம்

**திருவள்ளூர், ஜூலை 27-**



திருவள்ளூர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான இளைஞர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தாலுகா கவரைபேட்டை பகுதியை சேர்ந்த 8 வயது சிறுமி கடந்த 12-ந்தேதி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளியை 14 நாட்கள் தீவிர தேடுதல் வேட்டைக்கு பிறகு, தனிப்படை போலீசார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

மேற்குவங்காள மாநிலத்தை சேர்ந்த அந்த இளைஞரை, ஆந்திராவின் சூலூர்பேட்டை ரெயில்நிலையம் அருகே தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வடமாநில இளைஞரை போலீசார் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இளைஞரிடம் தனிப்படை போலீசார் விடிய விடிய விசாரணை மேற்கொண்டனர்.

சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் இளைஞர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐ.ஜி. அஸ்ரா கார்க் கூறுகையில், "சிறுமி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தேடப்படும் நபரின் அடையாளங்கள், கைதாகியுள்ள இளைஞருடன் ஒத்துப்போகிறது. முதற்கட்டமாக சந்தேகத்தின் அடிப்படையில் இளைஞரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அடுத்தகட்ட விசாரணை தொடர்ந்து நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் சிறுமியை வன்கொடுமை செய்ததாக கைதான இளைஞர் போலீசாரிடம் அதிர்ச்சி வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதன்படி ஐஜி, டிஎஸ்பி, காவல் துறையினர் நடத்திய விசாரணையின் போது, சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாக இளைஞர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கைதான நபர் தான் தன்னை வன்கொடுமை செய்தவர் என சிறுமியும் உறுதிப்படுத்தி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## ரூ.6,000-லிருந்து ரூ.15,000 ஆனது:

# பீகாரில் பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை உயர்த்திய நிதிஷ்

**பாட்னா, ஜூலை 27-**

பீகாரில் பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை ரூ.6,000 லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தி முதல்வர் நிதிஷ் குமார் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "'பீகார் பத்ரகார் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின்' கீழ், தகுதியுள்ள அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.6,000 க்கு பதிலாக ரூ.15,000 வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கூடுதலாக, 'பீகார் பத்ரகார் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின்' கீழ் ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர் இறந்தால், அவரின் மனைவிக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் ரூ.3,000 க்கு பதிலாக ரூ.10,000 மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது." என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், "ஜனநாயகத்தில் பத்திரிகையாளர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருந்து சமூக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கை செலுத்துகின்றனர். பத்திரிகையாளர்கள் தங்கள் பணியை பாரபட்சமின்றிச் செய்யவும், ஓய்வு பெற்ற பிறகு கண்ணியத்துடன் வாழவும் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளோம்" என்று அவர் தெரிவித்தார்

பீகாரில் சட்டப்பேரவைத் தேர்தல் இந்த ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பரில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை பெரிய அளவில் உயர்த்தி கவனம் ஈர்த்துள்ளார் நிதிஷ்குமார்.

# 3-வது நாளாக சரிந்த தங்கம் விலை

**சென்னை, ஜூலை 27-**

சென்னையில் 22 கேரட் ஆபரண தங்கத்தின் விலை தொடர்ந்து 3-வது நாளாக நேற்றும் (ஜூலை 26) குறைந்து விற்பனையானது. சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய காரணிகளாக உள்ளன. கடந்த ஜனவரி மாத தொடக்கத்தில் ஒரு பவுன் தங்கம் ரூ.58 ஆயிரமாக இருந்தது. பின்னர் தங்கம் விலை படிப்படியாக உயர்ந்தது. தொடர்ந்து, தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டது.

கடந்த 23-ம் தேதி ஆபரணத் தங்கம் ரூ.75 ஆயிரத்தை தாண்டி வரலாற்றில் புதிய உச்சத்தை பதிவு செய்தது. இந்நிலையில் 24-ம் தேதி முதல் தங்கம் விலை குறைந்து வருகிறது. தொடர்ந்து 3-வது நாளாக நேற்றும் குறைந்து விற்பனையானது. அதன்படி, நேற்று (சனிக்கிழமை) 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,160-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.400 குறைந்து ஒரு பவுன் ஆபரணத் தங்கம் ரூ.73,280-க்கு விற்பனையானது.

# நா.த.க. சார்பில் மாடு மேய்க்கும் போராட்டம்: சீமான் அறிவிப்பு

**சென்னை, ஜூலை 27-**

நாம் தமிழர் கட்சி சார்பில் மாடு மேய்க்கும் போராட்டம் நடத்தபோவதாக சீமான் அறிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் உழவர் பாசறை சார்பில், மாடு மேய்க்கும் போராட்டம் நடைபெறும் என்றும், நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான் பங்கேற்று மாடு மேய்ப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தேனி அடப்பாறையில் ஆக.3ம் தேதி வரும் ஆகஸ்ட் 3ம் தேதி மலையேறி மாடு மேய்க்கும் போராட்டத்தை நடத்தப் போவதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

கால்நடைகளை மேய்ப்பதற்கு பல இடங்களில் வனத்துறை தடை விதித்துள்ளதைக் கண்டித்து மாடு மேய்க்கும் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள மேய்ச்சல், தரிசு, மந்தை புறம்போக்கு நிலங்களை மீட்டெடுக்க வேண்டும் என்று சீமான் வலியுறுத்தியுள்ளார். ஆடு, மாடுகள் மாநாட்டைத் தொடர்ந்து மலையேறி மாடு மேய்க்கும் போராட்டத்தை சீமான் நடத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜார்க்கண்ட்டில் 3 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

**ராஞ்சி, ஜூலை 27-**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 3 நக்சலைட்டுகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம் உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் உள்ளது. நக்சலைட்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையை மத்திய அரசு தீவிரப்படுத்தி வருகிறது. மேலும், அடுத்த ஆண்டு மார்ச் 31-ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில், ஜார்க்கண்ட் மாநிலம் கும்லா மாவட்டம் ஹஹ்ரா வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக மாநில போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் நேற்று காலை வனப்பகுதியில் போலீசார் தீவிர சோதனை நடத்தினர். அப்போது அங்கு பதுங்கி நக்சலைட்டுகள், திடீரென போலீசார் மீது துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக போலீசாரும் துப்பாக்கி சூடு நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே நடந்த மோதலில் 3 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும், என்கவுன்டர் நடந்த பகுதியில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதேபோல், வனப்பகுதியில் மேலும் சில நக்சலைட்டுகள் பதுங்கி இருக்கலாம் என்பதால் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

# உ.பி.யில் வெவ்வேறு சாலை விபத்துகளில் 6 பேர் பலி

**லக்னோ, ஜூலை 27-**

உத்திரபிரதேசத்தில் நடந்த வெவ்வேறு சாலை விபத்துகளில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தரபிரதேசம் மாநிலத்தில் நகுவாட் காவல் நிலைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு சாலை ஓரம் டிராக்டர் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அப்போது அதே சாலையில் வந்த கார் ஒன்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து டிராக்டர் மீது மோதியது. இந்த விபத்தில் 6 பேர் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு ஹர்விந்தர் என்கிற ரிங்கு (35), பிருத்வி (50), மற்றும் மோதிராம் (52) ஆகியோர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மேலும் விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இதே சமயம் சர்சாவா காவல் நிலைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதியில் உத்தரகண்ட்-பஞ்ச்குலா நெடுஞ்சாலையில் இரண்டாவது விபத்து நிகழ்ந்தது, அங்கு ஒரு கார் மற்றும் லாரி மோதியதில் கணவன், மனைவி உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர், மேலும் 7 பேர் காயமடைந்தனர். உத்தரபிரதேசத்தில் இரு வெவ்வேறு சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாட்டில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறை அவசியமில்லை, வழக்கமான சுருக்கமுறை திருத்தம் போதுமானது. இது தொடர்பாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலர், அரசியல் கட்சி பிரதிநிதிகள் கூட்டத்தை கூட்டி, கருத்துக்களை கேட்டறிந்து, இந்திய தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

**- முத்தரசன்**



தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்த பிறகு பிரதமர் மோடி 3 தேர்தல்களை சந்தித்துள்ளார். இதுவரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கவில்லை. மற்ற மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு மத்திய அரசே நிதி ஒதுக்குகிறது. ஆனால், தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க ஜப்பானிடம் கடன் வாங்குகிறது.

**- செல்வப்பெருந்தகை**



தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த தமிழக அரசுக்கு அதிகாரம் உள்ளது, 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் களைய இது மிகவும் அவசியமாகும். இது தொடர்பாக தமிழக அரசுக்கு மாற்றுக் கருத்து இருந்தால் விவாதம் நடத்தி புரிய வைக்கத்தயாராக இருக்கிறேன்.

**- அன்புமணி**



தணிக்கைத் துறைகள் சுதந்திரமாக செயல்படவும், அங்கு பணிபுரிவோருக்கு பதவி உயர்வுகளை வழங்கவும், தணிக்கைப் பயண நேரத்தை குறைக்கவும், முறைகேடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர தனிக் கவனம் செலுத்தி முதல்வர் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- ஓ.பன்னீர்செல்வம்**

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில்

# இரண்டாம் பருவகாலத்தை முன்னிட்டு மலர்ச்செடிகள் நடவு செய்யும் பணி

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்



**ஊட்டி, ஜூலை.27-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இரண்டாம் பருவகாலத்தை முன்னிட்டு, மலர்ச்செடிகள் நடவு செய்யும் பணிகளை, மாவட்ட கலெக்டர் லட்சுமிபவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :நீலகிரி மாவட்டத்தில் 1848 ஆம் ஆண்டு மெக்ஐவர் என்பவரால் இந்த பூங்காவின் வடிவமைப்பு துவங்கப்பட்டு, 177-வது ஆண்டான 2025ம் ஆண்டின் இரண்டாம் பருவமானது செப்டம்பர் மாதத்தில் தொடங்குவதை முன்னிட்டு, உதகை அரசு தாவரவியல் பூங்காவில் இவ்வாண்டு இரண்டாம் பருவ மலர்க்காட்சிக்காக செடிகள் நடவு செய்யும் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்மலர்க்காட்சிக்காக, நாட்டின் பிற மாநிலங்களான கொல்கத்தா, காஷ்மீர், பஞ்சாப், புனே போன்ற இடங்களிலிருந்து இன்காமேரி கோல்டு, பிரெஞ்ச் மேரிகோல்டு, ஆஸ்டர், வெர்பினா, லூபின், கேன்டிடப்ட், காஸ்மஸ், பேன்சி, பெட்டுனியா, ஜினியா, ஸ்வீட்வில்லியம், அஜிரேட்டம், கேலண்டுலா, ஹெலிக்ரைசம், சப்னேரியா போன்ற 60 வகைகளில் பல்வேறு வகையான மலர் விதைகள் பெறப்பட்டு, சுமார் 5 இலட்சம் வண்ண மலர்ச்செடிகள் இரண்டாவது மலர்க்காட்சிக்காக மலர்ப்பாத்திகளில் நடவுப்பணியும், 15,000 மலர்த்தொட்டிகளில் சால்வியா, டெய்சி, டெல்பினியம், டேலியா போன்ற 30 வகையான மலர்ச்செடிகள் நடவுப்பணிகளும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இரண்டாம் பருவ மலர்க்காட்சி செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் துவங்கப்படவுள்ளதால், சுமார் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும்,

நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் இ பாஸ் பெற்று வரவேண்டும் எனவும், சோதனைச்சாவடிகளில் பூம்பேரியர் அமைக்கப்பட்டுள்ளது எனவும், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த கூடாது என்பது குறித்து சுற்றுலா பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கேரளா எல்லையோர சோதனை சாவடிகளில் தமிழ் மற்றும் மலையாளம் மொழியிலும், கக்கனல்லா சோதனை சாவடியில் கன்னட மொழியிலும் விளம்பரப்பலகைகள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதில் எரிவாயு உருளை, கேஸ்டவுவ், 12 மீட்டர் நீள பேருந்து அனுமதி இல்லை, பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தக் கூடாது போன்ற பல்வேறு விழிப்புணர்வு தகவல்;கள் அந்த விளம்பரப்பலகையில் இடம் பெற்றுள்ளது. எனவே சுற்றுலா பயணிகள் மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தோட்டக்கலை இணை இயக்குநர் ஷிபிலாமேரி, ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்கள் நவநிதா, ஜெயலட்சுமி, உதவி இயக்குநர்கள் ஜெயந்திபிரேம், பைசல், அனிதா, வட்டாட்சியர் சங்கர்கணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் கார்கில் வெற்றி தினம் கொண்டாட்டம்: போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அஞ்சலி

**ஊட்டி, ஜூலை.27-**

ஊட்டியில் நீலகிரி மாவட்ட ஒருங்கிணைந்த முன்னாள் முப்படை வீரர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற கார்கில் வெற்றி தின கொண்டாட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.




1999-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே கார்கில் போர் ஏற்பட்டது. இதில் இந்தியா வெற்றி பெற்றது. இந்த வெற்றியை ஆண்டுதோறும் ஜூலை 26-ந் தேதி கார்கில் போர் வெற்றி தினமாக இந்தியா கடைபிடித்து வருகிறது.

அன்றைய தினத்தில் போர் நினைவு சின்னத்தில் தலைவர்கள் மற்றும் ராணுவ தளபதிகள் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவார்கள். இதன்படி ஜூலை 26-ந் தேதியான நேற்று கார்கில் வெற்றி கொண்டாட்டம் கொண்டாடப்பட்டது.

முக்கிய தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.

இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் ஊட்டி ஏடிசி சுதந்திர திடலில் முன்னாள் ராணுவத்தினர் சார்பில் வெற்றி கொண்டாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

முன்னாள் ராணுவத்தினர், மெழுவர்த்தி ஏந்தி போரில் வீர மரணமடைந்த முப்படை வீரர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தினர். பின்னர் முன்னாள் ராணுவத்தினர் மூலம் முன்னாள் வீரர்களின் குடும்பத்தாருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை

# பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 99 அடியை தொட்டது: பவானி ஆற்றங்கரை மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை

**ஈரோடு, ஜூலை.27-**

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர்பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.இந்நிலையில் கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வந்ததால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது. நீலகிரி, கோவை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது.

இதனை எதிரொலியாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 99 அடியாக உயர்ந்து உள்ளது.99 அடியாக உள்ள பவானிசாகர் அணை தற்போது பார்ப்பதற்கு கடல் போல் காட்சியளிக்கிறது. நேற்றுமுன்தினம் அணைக்கு 3 ஆயிரம் கன அடியாக நீர் வந்து கொண்டிருந்த நிலையில் நேற்று காலை 7 ஆயிரத்து 300 கன அடியாக உயர்ந்துள்ளது.

பவானிசாகர் அணையில் இருந்து குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீரும், தடப்பள்ளி -அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்திற்கு 300 கன அடியும்,

கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 5 கன அடி நீரும் என மொத்தம் 1,205 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பவானிசாகர் செயற்பொறியாளர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பவானிசாகர் அணை காலை 99 அடியை எட்டியுள்ளது. இன்னும் ஓரிரு நாளில் 100 அடியை எட்ட உள்ளது. இதனால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பவானிசாகர் அணையில் இருந்து 3000 முதல் 10 ஆயிரம் கன அடி நீர் பவானி ஆற்றுக்கு திறக்க வாய்ப்பு உள்ளதால் பவானி ஆற்றங்கரை மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே பவானி ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் கவனத்துடன் இருக்க வேண்டும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு துணி துவைக்கவோ செல்லக்கூடாது என அறிவுறுத்தியுள்ளனர்.

# முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்: வரும் 16-ந் தேதிக்குள் இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம்

**ஊட்டி, ஜூலை.27-**

முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க விரும்பும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆகஸ்ட் 16-ந் தேதிக்குள் ஆன்லைன் மூலம் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் நடத்தப்பட இருக்கும் போட்டிகளில் வெவ்வேறு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் மாவட்ட அளவில் மொத்தமாக 53 வகையான போட்டிகள், மண்டல அளவில் 14 வகையான போட்டிகளும் என மொத்தம் 67 வகையான போட்டிகள் வரும் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடத்தப்பட உள்ளது.

பள்ளி பிரிவில் பங்கேற்க 19 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் 01.01.2007 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு படிப்பவராக இருக்க வேண்டும். கல்லூரி பிரிவில் பங்கேற்க 25 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் 01.07.2000 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். மாற்றுதிறனாளிகள் பிரிவு, அரசு ஊழியர்கள் பிரிவினருக்கு வயது வரம்பு இல்லை.

பொதுப்பிரிவினர் 15 வயது முதல் 35 வயது வரை (1.1.1990 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவராகவும், 15 வயது எனில் 01.01.2010 அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

போட்டிகளில் பங்கேற்க முன்பதிவு செய்திட கடைசி நாள் ஆகஸ்ட் 16-ந் தேதி ஆகும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள விளையாட்டில் ஆர்வம் கொண்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்று திறனாளி வீரர், வீராங்கனைகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் அனைவரும் தவறாமல் இணைய முகவரியின் மூலம் குழு மற்றும் தனிநபர்களின் அனைத்து விவரங்களை முன்பதிவு செய்ய வேண்டும். இணைய தளம் வாயிலாக மட்டுமே முன்பதிவு செய்ய முடியும். நேரில் வரும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்பட மாட்டாது.

தாங்களாகவோ பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு ஊட்டி எச்ஏடிபி மைதானத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை நேரில் அணுகலாம் என்று மாவட்ட விளையாட்டு துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு மாவட்ட

# உணவு பாதுகாப்புத்துறை,மாவட்ட சிறுதொழில்கள் சங்கம் இணைந்து நடத்தும் உணவு பாதுகாப்பு பயிற்சி,சான்றளிப்பு பெறுவதற்கான பயிற்சி

## கலெக்டர் ச.கந்தசாமி தொடங்கி வைத்தார்




**ஈரோடு, ஜூலை.27-**

ஈரோடு மாவட்டம், சென்னிமலை சாலை, சிட்கோ தொழிற்பேட்டை வளாகம், ஈடிசியா கூட்டரங்கில் கலெக்டர் ச.கந்தசாமி, மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை மற்றும் மாவட்ட சிறுதொழில்கள் சங்கம் இணைந்து நடத்தும் உணவு பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றளிப்பு பெறுவதற்கான பயிற்சியினை தொடங்கி வைத்தார்.

கலெக்டர் ச.கந்தசாமி தெரிவித்ததாவது,

தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்புத் துறையில் FSSAI சான்றிதழ் பெறுவதற்கு தற்போது FoSTaC என்பது இந்திய அரசு FSSAI அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு பயிற்சித் திட்டம் ஆகும்.

இது உணவுப் பாதுகாப்பு மற்றும் சான்றிதழ் பெற்ற பயிற்சிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

Fostac பயிற்சியின் நோக்கம், உணவு பாதுகாப்பு விதிகளை உணவுத் தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் வேலை நிறுவன ஊழியர்கள் புரிந்துகொள்ள வைக்கவும், உணவுப் பாதுகாப்பு மேலாளர்களை உருவாக்கவும், உணவுத் தொழில்களில் நேர்மையான, பாதுகாப்பான, தரமான நடைமுறைகளை ஊக்குவிக்கவும் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், உணவுத் தரச் சான்றிதழின் உரிமம் மற்றும் அதன் தொடர்ச்சியான உணவு கையாளுநர் பயிற்சி முக்கியத்துவத்துவம் வாய்ந்தது. ஈடிசியா போன்ற சங்கங்கள் உணவு பயிற்சி போன்ற முகாம்களை உணவு உற்பத்தியாளர்களுக்குத் தெரிவித்து, மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நிர்வாகத்துடன் இணைந்து முழுமையான பயிற்சியைப் பெற உறுதுணையாக இருக்க வேண்டும்.

நமது மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழில் செய்வதற்கு உகந்த பாசனத் திட்டங்கள் உள்ளதால், உணவு தயாரிப்பில் நமது மாவட்டம் மேலும் சிறப்பான பங்காற்ற முடியும். அதற்கான முயற்சிகளை ஈடிசியா மேற்கொள்ள வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் 25,000-க்கும் மேற்பட்ட உணவு உற்பத்தியாளர்கள் பதிவு செய்துள்ளார்கள். உணவுப் பொருள் தயாரிப்பினுடைய விபரங்களை பேக்கிங் லேபிளில் சரியாக குறிப்பிட வேண்டும். அனைவரும் இந்த உணவு கையாளுநர் பயிற்சியை பெற்றிருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், ஈரோடு மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் ஜி.வரலட்சுமி, முன்னாள் தலைவர் திருமூர்த்தி, செயலாளர் எ.சரவணபாபு, ஈடிசியா துணைத்தலைவர் பி.சுரேஷ், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2025-ம் ஆண்டிற்கான

# மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணைய வழி முன்பதிவு தொடக்கம்

**ஈரோடு ஜூலை 27-**

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் சு கந்தசாமி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் பொறுப் பேற்றவுடன் "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டு போட்டிகள் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. 2025-26ம் ஆண்டில் நடத்தப்பட விருக்கும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் பல்வேறு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர். மாற்றுத்திறனாளிகள். பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் 37 விளையாட்டுக்கள் 53 வகைகளில் மாவட்ட மண்டல அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000/- மும். இரண்டாம் பரிசாக ரூ.2,000/- மும். மூன்றாம் பரிசாக ரூ.1,000/- மும். சான்றிதழ்களும். பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன. மாநில அளவில் தனி நபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1.00,000/- மும், இரண்டாம் பரிசாக ரூ.75,000/- மும். மூன்றாம் பரிசாக ரூ.50,000/- மும் வழங்கப்படும். குழுபோட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75,000/- மும். இரண்டாம் பரிசாக தலா ரூ.50,000/-மும். மூன்றாம் பரிசாக தலா ரூ.25,000/-மும்பரிசாக வழங்கப்பட உள்ளது. இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் மூலம் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும்.

ஈரோடு மாவட்டத்தை சார்ந்த பள்ளிப் பிரிவிற்கு (19 வயதிற்குட்பட்டவர்களுக்கு அதாவது 6 முதல் 12 வகுப்பு வரை மட்டும். 01.01.2007 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்திருக்க வேண்டும்). கல்லூரிப் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு அதாவது 25

வயதிற்குட்பட்டவர்கள் 01.07.2000 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்திருக்க வேண்டும்), பொதுப்பிரிவு (15 வயது முதல் 35 வயது வரை) 15 வயது எனில் (01.01.2010 அன்றோ அல்லது அதற்கு முன்னர் பிறந்திருக்க வேண்டும்).

35 வயது எனில் (01.01.1990 அன்று அல்லது அதற்கு பின் பிறந்திருக்க வேண்டும்). அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களான நிரந்தரப் பணியாளர்களும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியில் 17.07.2025 ( http://adat.tn.gov.in (to) http://cmtrophy.adat.in 67 68 தள முகவரி மூலம் முன்பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க முன்பதிவு செய்திட கடைசி நாள் 16.08.2025 மாலை 6.00 மணி ஆகும். இணையதளம் மூலம் பதிவு செய்தவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கேற்க முடியும்.

எனவே ஈரோடு மாவட்டத்திலுள்ள பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், மாற்றுத்திறனாளிகள். பொதுப் பிரிவு போட்டியாளர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் ஆகியோர் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் கலந்து கொள்ள ஏதுவாக இணைய வழியாக பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

## ஊட்டியில் வரும் 2-ந் தேதி நடக்கிறது

**ஊட்டி, ஜூலை.27-**

நீலகிரி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் மகளிர் திட்டம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 02.08.2025 அன்று ஊட்டி பூங்கா சாலையில் அமைந்துள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் சென்னை, கோவை ,ஈரோடு , திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 10000க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தங்கள் நிறுவனங்களுக்கு பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாம் 02.08.2025 அன்று காலை 08.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இம்முகாமில், 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு தேர்ச்சி, பட்டதாரிகள், பட்டயப்படிப்பு படித்தவர்கள், ஐடிஐ, கணினி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள் என அனைத்து விதமான தகுதியாளர்களும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசமானதாகும். எனவே நீலகிரி மாவட்டத்தில் ஆர்வமாக உள்ள வேலைநாடுநர்கள் அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு இரத்து செய்யப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.இம்முகாமில் கலந்துக்கொள்ளும் வேலைநாடுநர்கள் எவ்வித கட்டணமும் செலுத்தத்தேவையில்லை. இம்முகாமில் கலந்துக்கொள்ள விருப்பம் உள்ள வேலைநாடுநர்கள் இணையதளத்தில் பதிவு செய்ய கொள்ள வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள தனியார்துறை நிறுவனங்கள் இம்முகாமில் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்து கொள்ளலாம். இம்முகாமில் பல்வேறு அரசுத்துறைகள் சார்பாக அரங்கங்கள் வேலைநாடுநர்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்படவுள்ளது.மேலும் விவரங்களுக்கு உதகமண்டல மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரில் அல்லது தொலைபேசி 0423-2444004 7200019666 வாயிலாக தொடர்பு கொள்ளலாம் என நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# ஊட்டி ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கியல் கல்லூரியில் ஒரு நாள் பயிற்சி பட்டறை




**ஊட்டி, ஜூலை.27-**

ஊட்டி ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கில் கல்லூரியில் அறிவியல் எழுத்து மற்றும் வெளியீட்டிற்கு செயற்கை நுண்ணறிவை நெறிமுறையாகப் பயன்படுத்துதல்'' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது

இந்த பயிற்சி பட்டறை அறிவியல் தகவல்தொடர்புகளில் ஏஐ கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த நெறிமுறை மற்றும் நடைமுறை அறிவை ஆராய்ச்சி அறிஞர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

கோயம்புத்தூரில் உள்ள சௌமிஸ் ஏடபிள்யூடபிள்யூ இன் நிறுவனர் டாக்டர் கே.எஸ்.சௌமியா ராணி, வள நபராகப் பணியாற்றி கோட்பாட்டை நடைமுறை செயல்விளக்கங்களுடன் இணைக்கும் நுண்ணறிவு அமர்வுகளை சிறப்பாக வழங்கினார்.

மொத்தம் 58 முழுநேர அறிஞர்கள் பதிவுசெய்து இதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர், மூளைச்சலவை செய்யும் விவாதங்களில் பங்களித்தனர், சிந்தனைமிக்க கேள்விகளை எழுப்பினர் மற்றும் ஏஐ கருவிகள் குறித்த வினாடி வினாவில் பங்கேற்றனர், இது கற்றல் அனுபவத்திற்கு ஒரு மாறும் மற்றும் ஊடாடும் கூறுகளைச் சேர்த்தது.

இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஜெ.எஸ்.எஸ் மருந்தாக்கில் கல்லூரியின் ஆராய்ச்சி மேம்பாட்டுக் குழுவும், ஒருங்கிணைப்பாளர்கள் சத்யநாராயண ரெட்டி மற்றும் கௌசல்யா ஆகியோர் மிக சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# குற்றச்செயல்கள் குறித்து புகார் அளிக்க தொலைபேசி எண்

## மாவட்ட காவல்துறை சார்பில் வழங்கப்பட்டது

**ஈரோடு, ஜூலை. 27 –**

ஈரோடு மாவட்டத்தில் குற்றச்சம்பவங்கள் மற்றும் இதர சட்ட விரோத செயல்களை தடுக்கும் வகையில், மாவட்ட காவல்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, பிரச்சனைகள் நடக்கும் இடத்திற்கு துரிதமாக சென்று தீர்க்கும் வகையில், டெடிகேட்டட் பீட் என்ற பெயரில் 24 மணி நேரமும் போலீசார் ரோந்து என்ற திட்டத்தை, கடந்த 19ம் தேதி மாவட்ட எஸ்.பி சுஜாதா, ஈரோடு எஸ்பி அலுவலகத்தில் தொடங்கி வைத்தார்.

அதன்படி, மாவட்ட முழுவதும் உள்ள 35 சட்ட ஒழுங்கு காவல்நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில், பொதுவான ஒரு இடத்தில் புறக்காவல் நிலையம் அமைத்து சுழற்சி முறையில் 24 மணி நேரமும் போலீசாரை ரோந்து வாகனத்துடன் நியமித்து, அவர்களுக்கு தனித்தனியாக பொது தொலைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த தொலைபேசி எண்களின் விபரங்கள் பொதுமக்களின் பார்வைக்காக புறக்காவல் நிலையம் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் பிளக்ஸ் பேனரில் அச்சடிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் வரும் காலங்களில் ஏதேனும் பிரச்சனை தொடர்பாக, அந்தந்த காவல்நிலையத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் கொடுக்கும் பட்சத்தில், ரோந்து போலீசார் மூலம் காலதாமின்றி பிரச்சனைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## புதுக்கோட்டை மாவட்டம்
## அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் புதிய திட்டப்பணிகளுக்கு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்



**புதுக்கோட்டை,ஜூலை.27-**
புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (26.07.2025) பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கிராமப்புறங்களின் அடிப்படைத் தேவைகளான, குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, மின் வசதி உள்ளிட்டவைகளை நிறைவேற்றி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றையதினம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தாந்தாணி ஊராட்சி, சிதம்பரவிடுதி, ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில் அருகில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.8.50 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்க கட்டடமும் மற்றும் சுப்பிரமணியபுரம் ஊராட்சியில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.44.01 லட்சம் செலவில் ஒரு லட்சம் கொள்ளளவுடன் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும் இன்றையதினம் திறந்து வைக் கப் பட் டுள் ளது. இதனை இப்பகுதி பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், சுப்பிரமணியபுரம் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.43.24 லட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கும், சிலட்டூர் ஊராட்சி, ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் அங்கன்வாடி கட்டிடப் பணியினையும் மற்றும் தாந்தாணி ஊராட்சி, ஸ்ரீ முருகன் கோவில் அருகில் ரூ.8.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கலையரங்கம் கட்டிடப் பணியினையும் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன் , அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், அரசமணி, வட்டாட்சியர் க.கருப்பையா மற்றும் சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர்; கலந்துகொண்டனர்.



**மயிலாடுதுறையில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் 87வது பிறந்தநாளை மாவட்ட செயலாளர் சித்தமல்லி பழனிசாமி தலைமையில் வெடி வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இதில்முன்னிலையாக நகர செயலாளர் கமல் ராஜா, இளைஞர் அணி தலைவர் விமல், செயற்குழு உறுப்பினர் வி சி கே காமராஜ், நகரத் தலைவர் வடிவேலு, பாட்டாளிமக்கள்நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

## தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம்
### மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தலைமையில் நடைபெற்றது



**தஞ்சாவூர்,ஜூலை.27-**
தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த் தலைமையில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், முன்னிலையில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் அனைத்துத் துறை அலுவலர்களுடன் (26.07.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தெரிவித்ததாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் மக்களின் விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்திற்காக பல்வேறு துறையில் வாயிலாக சாலை பணிகளை பாலப்பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மாநகராட்சி நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து இன்றைய தினம் தொடர்புடைய அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், சாலைப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்தும் அவற்றில் செலவிடப்பட்டுள்ள மதிப்பீடுகள் குறித்தும் மீதம் உள்ள மதிப்பீடல் குறித்தும் ஆய்வு செய்து விரைவாக பணிகளை முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் நிலுவையில் உள்ள அனைத்து திட்டப் பணிகளையும் விரைவாக தரமாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த்,இ.ஆ.ப., தெரிவித்தார்.

பின்னர், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் தஞ்சாவூர் – திருச்சி பிரிவில் அமைந்துள்ள மரியம்மன் கோவில் மற்றும் மேல வஸ்தாதாவடி ஆகிய இடங்களில் அணுகு சாலை (அண்டர் பாஸ் ரோடு ) சேவை சாலையில் ரூ.28.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை புனரமைப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பணிகளை விரைந்து முடிக்கவும், பொதுமக்கள் கோரிக்கையை தொடர்ந்து சோழபுரம் – தஞ்சாவூர் பிரிவில் கடகடபை கிராமத்திற்கு சேவை சாலை வழங்கும் பணிகளையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து நெடுஞ்சாலை துறையின் கும்பகோணம் கோட்டத்தின் சார்பில் சுந்தர பெருமாள் கோவில் மருதநல்லூர் இடையே கும்பகோணம் தஞ்சாவூர் சாலையைக் கும்பகோணம் மன்னார்குடி சாலையையும் இணைக்கும் சாலையில் குடிநீர் குழாய்கள் பதித்த சாலைகளை சீரமைக்கும் வகையில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சாலை சீரமைப்பு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இச்சாலை பணிகளை விரைவாக தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த் உத்தரவிட்டார்கள்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் , ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ் , நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர்கள் செந்தில்குமார் (தஞ்சாவூர்), செந்தில் தம்பி அவர்கள (கும்பகோணம்), உதவி கோட்ட பொறியாளர்கள் கீதா , விவேகானந்தன் , சிவராஜ் , இந்திய தேசிய ஆணையத்தின் மேலாளர் மினில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கும்பகோணத்தில் மாநில அளவிலான வில் வித்தை போட்டி



**தஞ்சாவூர்,ஜூலை.27-**
தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் மாநில அளவிலான வில் வித்தை போட்டியானது நேற்று கார்த்தி வித்யாலயா பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த போட்டியில் உற்சாகமாக பங்கேற்றனர். இந்த நிகழ்வு மாணவர்களின் ஒருமுகக் கோண திறனை ஊக்குவிக்கவும், இந்திய பாரம்பரிய விளையாட்டுகளை வளர்த்தெழுப்பவும் ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்தது. இந்த போட்டியானது வயதின் அடிப்படையில் 5 பிரிவுகளாக நடைபெற்றது . இந்த போட்டியினை பள்ளி தாளாளர் கார்த்திகேயன் தொடங்கி வைத்தார்கள்.இந்த நிகழ்வின் மூலம் மாணவர்களுக்கு நம்பிக்கையும், ஒழுக்கமும், ஆரோக்கியமும் வளர்க்கப்பட்டன.

ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் அனைவரும் போட்டியாளர்களுக்கு உற்சாகம் அளித்தனர். போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் பன்னாட்டு பள்ளி தாளாளர் பூர்ணிமா கார்த்திகேயன் வழங்கினார்கள்.இந்த போட்டியின் மூலம் மாணவர்களின் தூய்மையான கவனம், நிலைத்த மனம் மற்றும் உடற்சாதனை திறன்கள் வெளிப்பட்டன. வில் வித்தை போன்ற பாரம்பரிய விளையாட்டுகள், இன்றைய தலைமுறையில் தன்னம்பிக்கை மற்றும் ஒழுக்கம் வளர்க்கும் சிறந்த வழிமுறைகளில் ஒன்றாகும்

## திருமருகல் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் சாலை பணிகள்
### மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு

**நாகப்பட்டினம்,ஜூலை.27-**
நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் சாலை பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பால் உற்பத்தி மற்றும் பால்வள மேம்பாட்டுத்துறை ஆணையர் ஆ.அண்ணாதுரை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். முதலமைச்சரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் தென்னமரக்குடி பெருநாட்டார் தோப்பு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணிகளையும், திருமருகல் ஊராட்சி ஒன்றியம் கீழபூதனூர் - தென்னமரக்குடி சாலையினை மறுசீரமைக்க உள்ள பணி மற்றும் திட்டச்சேரி பேரூராட்சிக்குட்பட்ட தோப்புக்களம் பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.33.12 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளையும், திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தில் கால்நடைகளுக்கு போதிய வசதிகள் உள்ளதா என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பால் உற்பத்தி மற்றும் பால்வள மேம்பாட்டுத்துறை ஆணையர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்க்கொண்டு,சாலை பணிகளை விரைந்து முடிக்க உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது ஊரக வளர்ச்சிதுறை (செயற்பொறியாளர்) சீனிவாசன்,நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் நாகராஜ், திட்டச்சேரி செயல் அலுவலர் (பொ)பொன்னுசாமி, திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், சுப்பிரமணியன் பொறியாளர்கள் ரவிச்சந்திரன் பாலச்சந்தர் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்
### கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீ காந்த் தலைமையில் நடைபெற்றது



**மயிலாடுதுறை,ஜூலை.27-**
மயிலாடுதுறை அருகே தருமபுரம் ஆதீனம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தொடக்க விழா மாவட்ட கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையில், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் , சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் .எம்.பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் தெரிவித்ததாவது: இந்நிகழ்ச்சியில், 85-ற்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் வந்துள்ளன. தகுதியை பொறுத்து வேலை வாய்ப்பை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாடு அரசானது, நான் முதல்வன் போன்ற மகத்தான திட்டத்தை வழங்கியுள்ளது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பல்வேறு துறைகள் உள்ளது. நீங்கள் எந்த துறையில் திறமையாக உள்ளீர்கள் என்று தேர்ந்தெடுத்து அதில் முன்னேற வேண்டும். உங்களுக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுத்து அதில் வேலை செய்ய வேண்டும். நீங்கள் சுயமாகவும் தொழில் தொடங்க பல்வேறு திட்டங்கள் உள்ளது. அதையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏ ஐ மற்றும் கணினி துறையிலும் பல்வேறு பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது அதை நீங்கள் உங்கள் எதிர்கால வாழ்விற்கு பயன்படுத்திக் கொண்டு உங்களுக்கு தகுந்த வேலையை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆன்லைனிலும் நிறைய பயிற்சிகள் உள்ளன. நீங்கள் சுயதொழில் தொடங்குவதற்கும் இங்கு வாய்ப்புகள் உள்ளன அதில் முக்கியமாக நீட்ஸ் மற்றும் தாட்கோ மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. உங்களுக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுத்து முன்னேறவும். உங்கள் கைபேசியிலேயே நிறைய தகவல்கள் உள்ளன. அதை நீங்கள் தெரிந்து கொண்டு உங்களுக்கு ஏற்ற வேலையை பெற்றுக் கொள்ளலாம். அதோடு வெளிநாடு செல்வதற்கும் நிறைய வாய்ப்புகள் இங்கு உள்ளன. தமிழ்நாடு அரசு மற்றும் தனியார் துறை மூலமும் நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளது நீங்கள் எதில் வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து கொள்ளலாம். வேலைநாடுநர்கள் தங்களது சுய விவரங்களை www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொண்டு, மயிலாடுதுறை மாவட்டத்தில் தனியார்துறையில் வேலையளிக்கும் நிறுவனங்களின் விவரங்களை அறிய முடியும். அதோடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமும் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பங்கேற்க பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. அதையும் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உங்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று தேர்வானவர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாவட்ட கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் , பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் , சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் .செல்வராஜ், மகளிர் திட்டம் திட்ட அலுவலர்.சீனிவாசன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) .அருணகிரி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பழனிவேல், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் வேல்முருகன், தாட்கோ மாவட்ட மேலாளர் .சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்
### கலெக்டர் வ.மோகனச்சந்திரன் வழங்கினார்



**திருவாரூர்,ஜூலை.27-**
திருவாரூர் மாவட்டத்தில், ''உங்களுடன் ஸ்டாலின்'' திட்டம் முகாம்; நடைபெற்று வருவதை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

திருவாரூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை நகர்புறப்பகுதிகளில் 54 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 131 முகாம்களும் என மொத்தம் 185 முகாம்கள் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப்பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

''உங்களுடன் ஸ்டாலின்'' திட்டத்தின்கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கியுள்ளனர். அதனடிப்படையில், அட்டவணைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நாட்களில் பொதுமக்கள் தொடர்புடைய முகாம்களில் கலந்து கொள்ளலாம்.

திருவாரூர் மாவட்டம் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கொடிக்கால் பாளையம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் பார்வையிட்டு, வருவாய்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு சாதி சான்றிதழ், வருமான வரி சான்றிதழும், இருப்பிட சான்றிதழும் மற்றும் பிறப்பு சான்றிதழும்;, மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 01 பயனாளிக்கு மின்னணு குடும்ப அட்டையினையும்; வழங்கினார்கள். திருவாரூர் வட்டத்திற்குட்பட்ட மாங்குடி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் பார்வையிட்டு, 01 பயனாளிக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கடன் அட்டையும், வருவாய்த்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு பிறப்பு சான்றிதழும், வேளாண்மை-உழவர் நலத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருள்களையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, வருவாய் கோட்டாட்சியர் சௌம்யா (திருவாரூர்), திருவாரூர் நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், நகராட்சி ஆணையர் சுரேந்திரஷா, மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் அமுதா, மாவட்ட வழங்கல் அலுவலர் செல்லப்பாண்டி, வட்டாட்சியர்கள் ஸ்டாலின் (திருவாரூர்), ஓம் சிவகுமார் (வலங்கைமான்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## திருவாரூரில் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் இயக்கம் சார்பில் போராட்டம்



**திருவாரூர்,ஜூலை.27-**
திருவாரூரில் சம வேலைக்கு சம ஊதியம் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் முன்பு இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் இயக்கம் சார்பில் மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.திமுக அரசு பதவியேற்று 4 ஆண்டுகள் கடந்தும் கொடுத்த வாக்குறுதியினை இன்னும் நிறைவேற்றவில்லை.தேர்தல் வாக்குறுதியினை 311யை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.அப்படி இல்லை என்றால் வரும் செப்டம்பர் மாதத்தில் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தபோவதாக திட்டமிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை உடனடியாக களைய வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரத போராட்டம் நடைப்பெற்றது.மாவட்ட தலைவர் ஏகராஜா தலைமையில் நடைப்பெற்ற போராட்டத்தில் மாவட்ட செயலாளர் குணசீலன்,மாவட்ட துணை செயலாளர் வெங்கடேசன்,மாவட்ட பொருளாளர் பாலாஜி, மாவட்ட துணை தலைவர் துரைமுருகன் உள்ளிட்ட நுற்றுக்கும் மேற்ப்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## புறாகிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



**நாகப்பட்டினம்,ஜூலை.27-**
நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் கட்டுமாவடி ஊராட்சி புறாகிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் மாணிக்கவாசகம் தலைமை வகித்தார்.

பள்ளி மேலாண்மை குழு தலைவர் எஸ்.கவிதா முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் அடிப்படை திறன் வகுப்பறை மேம்பாட்டு திட்டம், மாணவர்களை விளையாட்டில் ஊக்குவித்தல், பள்ளியின் முன்னேற்றம் கருதி அனைவரும் பாடுபட வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் பள்ளி மேலாண்மை குழுவின் துணைத் தலைவர் ஸ்டாலின் பாபு,பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் தமிமுன் அன்சாரி மற்றும் உறுப்பினர்கள் ஆசிரியர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## 4-வது டெஸ்ட் போட்டி:
# இந்திய அணி திணறல்

மான்செஸ்டர்,ஜூலை 27-

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 669 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

**நான்காவது டெஸ்ட்...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸில் 358 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

**ஜோ ரூட் , ஸ்டோக்ஸ் சதம்...**

இதனையடுத்து, முதல் இன்னிங்ஸில் விளையாடிய இங்கிலாந்து அணி 669 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அந்த அணியில் ஜோ ரூட் மற்றும் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் இருவரும் சதம் விளாசி அசத்தினர். ஜோ ரூட் 150 ரன்களும், கேப்டன்



பென் ஸ்டோக்ஸ் 141 ரன்களும் எடுத்தனர். பென் டக்கெட் (94 ரன்கள்), ஸாக் கிராலி (84 ரன்கள்), ஆலி போப் (71 ரன்கள்) எடுத்தனர்.

**பும்ராவுக்கு 2...**

இந்தியா தரப்பில் ரவீந்திர ஜடேஜா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஜஸ்பிரித் பும்ரா மற்றும் வாஷிங்டன் சுந்தர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், அன்ஷுல் கம்போஜ் மற்றும் முகமது சிராஜ் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இங்கிலாந்து அணி இந்தியாவைக் காட்டிலும் 311 ரன்கள் முன்னிலை பெற்றது.

**பேரதிர்ச்சி...**

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 669 ரன்களுக்கு ஆட்டமிழக்க, இந்திய அணி 311 ரன்கள் பின் தங்கிய நிலையில் போட்டியின் நான்காம் நாளான நேற்று (ஜூலை 26) அதன் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடி வருகிறது. இந்திய அணிக்கு தொடக்கமே பேரதிர்ச்சியாக அமைந்தது. தொடக்க ஆட்டக்காரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 0 ரன்னில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளிக்க, அடுத்து களம் கண்ட தமிழக வீரர் சாய் சுதர்சனும் அவர் சந்தித்த முதல் பந்திலேயே 0 ரன்னில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

**இக்கட்டான சூழல்...**

உணவு இடைவேளையின்போது, இந்திய அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு ரன்னுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்து இக்கட்டான சூழலில் உள்ளது.

## என்ன ஆச்சு பும்ராவுக்கு?
# 173 பந்தில் 1 முறை மட்டுமே வேகமாக பந்துவீச்சு

மான்செஸ்டர், ஜூலை 27-



மான்செஸ்டர் டெஸ்ட்டில் இந்தியாவின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் ஜஸ்ப்ரீத் பும்ரா வேகமாக (140கி.மீ./மணி) பந்துவீசாதது அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**இங்கி. முன்னிலை...**

ஆண்டர்சன் - டெண்டுல்கர் டிராபியில் இங்கிலாந்து 2-1 என முன்னிலையில் இருக்கிறது. தற்போது, 4-ஆவது டெஸ்ட் மான்செஸ்டரில் ஓல்ட் டிராஃபோர்டில் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டியில், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 358 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 669 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அந்த அணியில் ஜோ ரூட் மற்றும் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் இருவரும் சதம் விளாசி அசத்தினர். ஜோ ரூட் 150 ரன்களும், கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 141 ரன்களும் எடுத்தனர். பென் டக்கெட் (94 ரன்கள்), ஸாக் கிராலி (84 ரன்கள்), ஆலி போப் (71 ரன்கள்) எடுத்தனர்.

**நொண்டிக்கொண்டே...**

இந்த போட்டியில், பும்ரா களத்தில் நொண்டிக்கொண்டே இருந்த காட்சிகளும் இந்திய ரசிகர்களுக்கு வருத்தத்தை அளித்தது. ஹெடிங்லே, லார்ட்ஸ் திடலில் வேகமாகப் பந்துவீசிய ஜஸ்ப்ரீத் பும்ரா ஓல்ட் டிராஃபோர்டில் ஒரே முறை மட்டுமே 140கி.மீ./மணி வேகத்திற்கும் அதிகமாக பந்துவீசியது அதிர்ச்சியளிக்கிறது. ஏற்கெனவே, பும்ராவுக்கு பணிச்சுமை இருப்பதாகக் கூறப்பட்டது. இருப்பினும், இந்தப் போட்டி முக்கியமானது என்பதால் ஓய்வெடுக்காமல் விளையாடி வருகிறார்.

**அதிர்ச்சி...**

இந்தத் தொடரில் 140கி.மீ./மணி வேகத்திற்கும் அதிகமாக பும்ரா பந்துவீசிய விவரங்கள்

ஹெடிங்லே: 266 பந்தில் 106 முறை, 39.84 சதவிகிதம்

லார்ட்ஸ்: 257 பந்தில் 69 முறை, 26.84 சதவிகிதம்

ஓல்ட் டிராஃபோர்ட்: 173 பந்தில் 1 முறை, 0.57 சதவிகிதம்

படிப்படியாக பும்ராவின் வேகம் குறைந்துக்கொண்டே வரும் புள்ளி விவரங்கள் அதிர்ச்சியளிக்கின்றன.



2 நாள் அரசுமுறை பயணமாக தமிழகம் வந்துள்ள பிரதமர் மோடி நேற்று தூத்துக்குடியில் ரூ.452 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் மத்திய விமானப்போக்குவரத்து துறை அமைச்சர் கிஞ்சரப்பு ராம் மோகன் நாயுடு, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் உள்ளனர்.

## தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையம் உள்ளிட்ட
# ரூ. 4,250 கோடி மதிப்பில் நிறைவுற்ற திட்டங்களை பிரதமர் திறந்து வைத்தார்

தூத்துக்குடி, ஜூலை 27-

2 நாள் அரசுமுறை பயணமாக தமிழகம் வந்துள்ள பிரதமர் நரேந்திரமோடி நேற்று தூத்துக்குடியில் ரூ.452 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையம் உள்ளிட்ட ரூ.4,250 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் திறந்து வைத்தார்.

பிரதமர் மோடி 2 நாள் சுற்றுப்பயணமாக நேற்று (சனிக்கிழமை) தமிழகத்திற்கு வருகை தந்தார். மாலத்தீவில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்ட அவர், 7.50 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகை தந்தார். விமான நிலையத்தில் அவரை அமைச்சர் தங்கம் தென்னரசு, கவர்னர் ஆர்.என்.ரவி, மத்திய அமைச்சர்கள் எல்.முருகன், ராம் மோகன் நாயுடு உள்ளிட்டோர் வரவேற்றனர். தொடர்ந்து அங்கு நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, ரூ.452 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து தூத்துக்குடியில் ரூ.550 கோடி மதிப்பிலான திட்டங்கள், கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மின் வழித்தட பணி, மதுரை-போடிநாயக்கனூர் ரெயில் பாதை மின்மயமாக்கல் திட்டம், கூடங்குளம் யூனிட் 3, 4-ல் மின்சாரம் எடுப்பதற்கான மின்பகிர்மான அமைப்பு தொடக்கம், ரூ.283 கோடி மதிப்பிலான ஆரல்வாய்மொழி-நாகர்கோவில், நெல்லை-மேலப்பாளையம் இருவழிப்பாதை திட்டம், சேத்தியாத்தோப்பு - சோழபுரம் பிரிவின் நான்கு வழிச்சாலை திட்டம், வ.உ.சி. துறைமுகத்தில் ரூ.285 கோடியில் 3-வது வடக்கு சரக்கு தளவாட நிலையம் திறப்பு, நாகர்கோவில் நகரம்-சந்திப்பு-கன்னியாகுமரி இடையே இரட்டை ரெயில் பாதை திட்டம், ரூ.1,030 கோடி மதிப்பிலான ரயில்வே திட்டங்கள் உள்பட தமிழகத்தில் நிறைவுற்ற ரூ.4,250 கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் நரேந்தி மோடி திறந்த வைத்தார்.

# செப்டம்பர் 9 முதல் 28-ம் தேதி வரை ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்

## அதிகாரபூர்வ அறிவிப்பு

துபாய், ஜூலை 27-

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் செப்டம்பர் 9-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை இந்த அறிவிப்பை ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவர் மொஷின் நக்வி அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளார். இந்த தொடருக்கான போட்டி அட்டவணை பின்னர் வெளியிடப்படும் என கூறப்பட்டுள்ளது.

**8 அணிகளில்....**


17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்தும் உரிமத்தை இந்தியா பெற்றிருந்தது. செப்டம்பர் மாதம் இந்தியாவில் குறிப்பிட்ட நகரங்களில் இந்த போட்டியை நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளில் பாகிஸ்தானும் ஒன்று. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்துக்கு பிறகு இந்தியா- பாகிஸ்தான் உறவு மேலும் மோசமாகி விட்டதால், பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு சென்று விளையாடுவதில்லை என்ற நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது.

**இந்தியா மறுப்பு...**

ஏற்கனவே கடந்த பிப்ரவரி, மார்ச்சில் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் பாகிஸ்தானில் நடந்தபோது இந்திய அணி பாதுகாப்பு அச்சம் காரணமாக அங்கு செல்ல மறுத்தது. இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் பொதுவான இடமான ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றப்பட்டது. ஆசிய கோப்பை போட்டிக்கும் அது போன்ற சிக்கல் உருவானதால் அது குறித்து ஆசிய கிரிக்கெட் கவுன்சில் நிர்வாகிகள் டாக்காவில் ஆலோசனை நடத்தினர். இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில் துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா காணொலி வாயிலாக கூட்டத்தில் பங்கேற்றார்.

**அரபு அமீரகத்தில்...**

இதில் பெரும்பாலான நிர்வாகிகள் போட்டியை இந்தியாவில் இருந்து ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றுவதற்கு ஆதரவு தெரிவித்தனர். இந்தியாவும் பொதுவான இடத்தில் போட்டியை நடத்த ஒப்புக் கொண்டது. இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு ஓரிரு நாளில் அறிவிக்கப்படும் என ஆசிய கிரிக்கெட் கவுன்சில் சேர்மன் மொசின் நக்வி தெரிவித்திருந்தார். இந்நிலையில் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் செப்டம்பர் 9-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை இந்த அறிவிப்பை ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவர் மொஷின் நக்வி அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளார். இந்த தொடருக்கான போட்டி அட்டவணை பின்



னர் வெளியிடப்படும் என கூறப்பட்டுள்ளது.

**ஒரே பிரிவில் இடம்...**

இந்த போட்டியில் மொத்தம் 8 அணிகள் கலந்து கொள்கின்றன. பரம எதிரிகளான இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம் பெறும் என்று தெரிகிறது. ஏற்கனவே திட்டமிடப்பட்ட அட்டவணையில் ஏ பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஹாங்காங் அணிகளும், பி பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஓமன் அணிகளும் இடம் பெற்று இருந்தன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும். இருப்பினும் இந்த தொடரில் இந்தியா-பாகிஸ்தான் போட்டி நடைபெறுமா? என்பது அட்டவணை வெளியான பின்னர்தான் தெரியவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விசாரணைக்குழு அறிக்கை தாக்கல்: சின்னசாமி மைதானத்துக்கு சிக்கல்

பெங்களூரு, ஜூலை 27-

ஆர்.சி.பி. வெற்றிக் கொண்டாட்ட நிகழ்ச்சியில் 11 பேர் பரிதாபமாக பலியான நிலையில், சம்பவத்துக்கு காரணமாக அமைந்த எம்.சின்னசாமி மைதானமானது பாதுகாப்பானது அல்ல என்று விசாரணைக் குழு அறிவித்துள்ளது.

**வெற்றிக் கொண்டாட்டம்...**

நடப்பு ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்சிபி) அணி முதன்முறையாக கோப்பையை வென்றது. இதையொட்டி, பெங்களூரு எம்.சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் ஜூன் 4ஆம் தேதியில் வெற்றிக் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

**11 போ் பலி...**

மைதானத்தின் வாயில் மற்றும் சுற்றுப்புறத்தில் சுமார் 3 லட்சம் ரசிகர்கள் திரண்டதால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவம் குறித்து நீதி விசாரணைக்கு உத்தரவிட்ட கர்நாடக அரசு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்குவதாகவும் அறிவித்தது. மேலும், இந்த அசம்பாவிதத்தை தடுக்க தவறியதாக பெங்களூரு நகர காவல் ஆணையர் உள்பட காவல்துறை அதிகாரிகள் சிலரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

**விசாரணை ஆணையம்...**

இந்த உயிரிழப்புகளுக்கு ஆர்.சி.பி. அணி, கர்நாடக கிரிக்கெட் கழகம், காவல்துறையினரின் ஒட்டுமொத்த அலட்சியமே காரணம் என்று விசாரணை ஆணைய அறிக்கையில் தெரிவித்தது. கூட்டநெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கர்நாடக உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஜான்மைக்கேல் டிகுன்ஹா தலைமையில் தனிநபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

**பாதுகாப்பானது அல்ல...**

கர்நாடக மாநில அரசிடம் டிகுன்ஹா தலைமையிலான விசாரணைக் குழு அளித்த அறிக்கையில், சின்னசாமி மைதானம் பெரியளவிலான நிகழ்வுகள் நடத்த போதிய வசதிகள் இல்லாதது, பொது பாதுகாப்புக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்துகளை ஏற்படுத்துவதாக கூறியதுடன், சின்னசாமி மைதானம் பாதுகாப்பானது அல்ல, தகுதியற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் இந்த அறிக்கையை அம்மாநில அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது.

**நடத்தப்படுமா?...**

இதனிடையே, ஐ.சி.சி. மகளிர் உலகக் கோப்பை 2025 போட்டியின் தொடக்கம் மற்றும் இறுதிப் போட்டிகளும் சின்னசாமி மைதானத்தில் தான் நடத்தப்படவிருப்பதாக இருந்தது. ஆனால், தற்போது விசாரணைக் குழுவின் அறிக்கையால் ஐ.சி.சி. மகளிர் உலகக் கோப்பைப் போட்டிகள் இடமாற்றம் செய்யும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. மேலும், அடுத்தாண்டு பிரீமியர் லீக் போட்டிகளும் சின்னசாமி மைதானத்தில் நடத்தப்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

## கடலூர்: ஏரியில் மூழ்கி உயிரிழந்த
# சிறுவன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிவாரண நிதி அறிவித்தார் முதல்வர்

சென்னை, ஜூலை 27-

கடலூர் மாவட்டம் ஸ்ரீ முஷ்ணம் ஏரியில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்கிட முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:- கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் வட்டம், ஸ்ரீ வக்காரமாரி கிராமம், மேட்டுத் தெருவைச் சேர்ந்த செல்வன். அப்துல் ஆசிம் (வயது 12) என்ற சிறுவன் இன்று (26.07.2025) காலை சுமார் 10.30 மணியளவில் ஸ்ரீ வக்காரமாரி குன்னத்தேரி என்ற ஏரியில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ரூ.3 லட்சம் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குல்தீப் யாதவ் இடம்பெறாதது ஏன்? இந்திய அணி பயிற்சியாளர் விளக்கம்

மான்செஸ்டர், ஜூலை 27-

4-வது டெஸ்டில் குல்தீப் யாதவ் இடம்பெறாதது குறித்து இந்திய பயிற்சியாளர் விளக்கமளித்துள்ளார்.

**ஓல்டு டிராப்போர்டில்...**

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராப்போர்டில் நடந்து வருகிறது. இதில் முதலில் பேட் செய்த இந்தியா முதல் இன்னிங்சில் 358 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது.

**இங்கி. 669 ரன்கள்...**

பின்னர் தனது முதல் இன்னிங்சை அதிரடியாக தொடங்கிய இங்கிலாந்து 669 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அந்த அணியில் ஜோ ரூட் மற்றும் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் இருவரும் சதம் விளாசி அசத்தினர். ஜோ ரூட் 150 ரன்களும், கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 141 ரன்களும் எடுத்தனர். பென் டக்கெட் (94 ரன்கள்), ஸாக் கிராலி (84 ரன்கள்), ஆலி போப் (71 ரன்கள்) எடுத்தனர்.

**குல்தீப் இல்லை...**

முன்னதாக இந்த போட்டியில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. பல முன்னாள் வீரர்களும் இந்த போட்டியில் இந்தியா வெற்றி பெற வேண்டுமெனில் குல்தீப் யாதவை பிளேயிங் லெவனில் சேர்க்க வேண்டுமென கூறினர். அவரை சேர்க்காத இந்திய அணி அறிமுக வீரர் அன்ஷுல் கம்போஜை அணியில் சேர்த்துள்ளது.

**உலகத் தரம் வாய்ந்தவர்...**

இந்நிலையில் குல்தீப் யாதவை பிளேயிங் லெவனில் சேர்க்காதது ஏன்? என்பது குறித்து இந்திய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் மோர்னே மோர்கல் விளக்கமளித்துள்ளார். இது தொடர்பாக பேசிய அவர் கூறுகையில், "குல்தீப் யாதவை வைத்து அணியில் எப்படி சமநிலையை காண முடியும், பேட்டிங் வரிசையை ஆழப்படுத்த முடியும் என்று பார்க்க வேண்டும். குல்தீப் உலகத் தரம் வாய்ந்தவர், தற்போது அவர் நன்றாக பந்து வீசுகிறார். எனவே அவர் களமிறங்குவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பேட்டிங் துறையில் சமநிலையை உண்டாக்க முயற்சிப்பது அவருடைய வருகையை தள்ளி வைக்கிறது.

**வறண்டு இருக்கிறது...**

நாளின் இறுதியில் உங்களுக்கு ரன்கள் தேவை. குறிப்பாக இங்கிலாந்து போன்ற அதிரடியாக விளையாடும் அணிக்கு எதிராக 400 ரன்கள் அடிப்பதற்காக உங்களுக்கு கூடுதலாக பேட்ஸ்மேன்கள் தேவை. மான்செஸ்டர் பிட்ச் இதுவரை வறண்டுதான் இருக்கிறது. அதனால் பந்து கொஞ்சம் சுழல்கிறது.

அது வாஷிங்டன் சுந்தர், ஜடேஜாவை ஆட்டத்திற்குள் கொண்டு வந்துள்ளது. குல்தீப்பை விளையாட வைக்க முயற்சிக்கிறோம். ஆனால் அதற்கு டாப் 6 பேட்ஸ்மேன்கள் தொடர்ச்சியாக பெரிய ரன்கள் குவிக்க வேண்டும். அப்படியானால் குல்தீப் போன்ற ஒருவரை நாங்கள் அணியில் சேர்க்க முடியும்" என்று கூறினார்.

## மெத்வதேவ் அதிர்ச்சி தோல்வி

வாஷிங்டன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி சுற்றில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ், பிரான்சின் கொரன்டின் மவுடெட் உடன் மோதினார்.

இதில் 6-1 என முதல் செட்டை மெத்வதேவ் வென்றார். இதில் சுதாரித்துக் கொண்ட பிரான்ஸ் வீரர் அடுத்த இரு செட்களை 6-4, 6-4 என செட் கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார். இதன்மூலம் மெத்வதேவ் இந்தத் தொடரில் இருந்து வெளியேறினார்.

## இந்தியா - பாக். இடையே 3 போட்டிகள்

ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பரில் ஆரம்பமாகும் ஆசிய கோப்பை தொடரில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே குரூப்பில் இடம்பெற அதிக வாய்ப்புள்ளதை ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மோசின் நக்வி தெரிவித்தார்.

இவரே பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் என்பதால் இந்தியாவும் பாகிஸ்தானும் இந்தத் தொடரில் 3 முறை நேருக்குநேர் சந்திக்க வாய்ப்புள்ளது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

லீக் சுற்றில் இவ்விரு அணிகளும் ஒரு முறை பலப்பரீட்சை நடத்தும். அதன்பின், சூப்பர் - 4 சுற்றுக்கும் அசுரபலம் வாய்ந்த இந்தியாவும் பாகிஸ்தானும் முன்னேறிவிடும் என்பதால் அந்தச் சுற்றிலும் இவ்விரு அணிகளும் ஒரு முறை பலப்பரீட்சை நடத்தும். இறுதியாக, இறுதிப்போட்டியிலும் இந்தியாவை பாகிஸ்தான் சந்திக்க வாய்ப்புள்ளது.

## ஸ்குவாஷ்: அனாஹத்துக்கு வெண்கலம்

எகிப்தில் உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது. நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் ஆசிய ஜூனியர் (19 வயது) சாம்பியன், இத்தொடரின் நம்பர்-2 அந்தஸ்து பெற்ற இந்தியாவின் அனாஹத் சிங், எகிப்து வீராங்கனை நாடியன் எல்ஹம்மாமை சந்தித்தார்.

இதில் அனாஹத் 6-11, 12-14, 10-12 என்ற செட் கணக்கில் 0-3 என தோல்வி அடைந்தார். இதனால் அனாஹத் சிங்குக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் தொடரில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு பதக்கம் வென்ற மூன்றாவது இந்திய வீராங்கனை அனாஹத் சிங்.

## களங்கம் ஏற்படும் வகையில் செயல்படக்கூடாது:
# த.வெ.க.வினருக்கு கட்சி தலைமை அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 27-

த.வெ.க. கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயல்படக்கூடாது என்று கட்சித் தலைமைக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து கட்சியின் பொதுச்செயலர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போது தமிழகச் சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் காலம். கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டிய வேளை. கழகத்தின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் குறிக்கோள்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதமாகக் கழகத் தோழர்கள் ஒருபோதும் செயல்படக் கூடாது.

தேர்தல் பரப்புரை மற்றும் உறுப்பினர் சேர்க்கைப் பணிகளுக்காக வீடு வீடாகச் செல்லும் போது, தலைமைக் கழகம் அதிகாரப்பூர்வமாக அனுமதித்துள்ள பரப்புரை வாசகங்கள் மற்றும் புகைப்படத்தைக் கொண்ட ஸ்டிக்கர் மட்டுமே ஒட்ட வேண்டும்.

தேர்தல் பரப்புரை, பொதுக் கூட்டங்கள், கொள்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது, தனிப்பட்ட விதத்திலும் தலைமைக் கழகத்தால் பிரத்தியேகமாகத் தேர்தல் பரப்புரை சார்ந்து அங்கீகரிக்கப்படாத பேனர் டிசைன்கள், இலச்சினைகள், வாசகங்களைப் பயன்படுத்தக் கூடாது.

மேலும் பரப்புரை தொடர்பான அனைத்திலும் கட்டுப்பாட்டுடன் இந்த நடைமுறையை உறுதியாகப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு பின்பற்றாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கட்சியின் அனைத்து நிலை அமைப்புகளின் சார்பிலும் நடத்தப்படும் உள்ளரங்கு மற்றும் பொதுவெளி, பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளின் போது, கட்சி நிர்வாகிகளும் தோழர்களும் பட்டாசு வெடித்துக் கொண்டாடுவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

நம் அனைவர் மீதும் எக்காலத்திலும் அன்பும் அக்கறையும் கொண்டிருக்கும் நம் தலைவரின் கரங்களுக்கு வலுச் சேர்த்து, 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி வாகை சூடி, புதிய வரலாறு படைப்போம்" . இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## ஆஸ்திரேலியா அணி அபார வெற்றி

வெஸ்ட் இண்டீஸ்- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் 5 போட்டிகள் கொண்ட டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில், 3ஆவது போட்டி இந்திய நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்றது.

இதில் முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் 214 ரன்கள் குவித்தது. அந்த அணியின் தொடக்க வீரர்களான பிராண்டன் கிங், கேப்டன் ஷாய் ஹோப் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பிராண்டன் கிங் 36 பந்தில் 62 ரன்கள் விளாசினார். ஷாய் ஹோப் 57 பந்தில் 102 ரன்கள் குவித்தார்.

பின்னர் 215 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் ஆஸ்திரேலியா களம் இறங்கியது. மிட்செல் மார்ஷ் (22), மேக்ஸ்வெல் (20), ஜோஷ் இங்கிலீஷ் (15), கேமரூன் கிரீன் (11) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 5ஆவது விக்கெட்டுக்கு டிம் டேவிட் உடன் மிட்செல் ஓவன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

குறிப்பாக டிம் டுவிட் ஆட்டத்தில் அனல் பறந்தது. 16 பந்தில் அரைசதம் அடித்த டிம் டேவிட், 37 பந்தில் சதம் விளாசினார். அத்துடன் ஆஸ்திரேலியா 16.1 ஓவரிலேயே 4 விக்கெட் இழப்பிற்கு 215 ரன்கள் அடித்து அசத்தல் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் முதல் 3 போட்டிகளில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா, தொடரை வென்று முன்னிலை வகிக்கிறது.

# சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலில் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்பட கண்காட்சி



**சிவகங்கை, ஜூலை 27-**
சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அதப்படக்கி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன. மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெற வேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.

# அரசநகரி கலைச்செல்வி அழகுமுத்து மாரியம்மன் கோவில் பூச்சொரிதல் விழா

**பரமக்குடி, ஜூலை 27-**
பரமக்குடி அருகே உள்ள அரசநகரி கலைச்செல்வி அழகு முத்து மாரியம்மன் கோவில் பூச்சொரிதல் விழா நடைபெற்றது.
ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவுக்கு உட்பட்ட போகலூர் ஒன்றியத்தில் உள்ள அரச நகரி கிராமத்தில் அமைந்துள்ள கலைச்செல்வி அழகு முத்து மாரியம்மன் கோவில் 32 வது ஆண்டு ஆடி பொங்கல் திருவிழா கடந்த 18ஆம் தேதி காப்பு கட்டுதலுடன் துவங்கியது. அன்று காலையில் விநாயகர் பூஜை, கும்ப பூஜை நடைபெற்றது. 22 ஆம் தேதி 108 திருவிளக்கு பூஜையும், தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது. நேற்று முன்தினம் கரகம் எடுத்து பெண்கள் பூக் கூடைகளுடன் வீதி உலா வந்து பல வண்ண பூக்களை கொண்டு அம்மனுக்கு அலங்காரம் செய்து பூச்சொரிதல் விழா நடைபெற்றது. நேற்று பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு, தொடர்ந்து அக்னி சட்டி, ஆயிரம் கண் பானை, 108 பால்குடங்கள் எடுத்து ஏராளமான பக்தர்கள் நேத்திக்கடன் செலுத்தினர்.



தொடர்ந்து அம்மனுக்கு பல்வகை அபிஷேகங்களும், விசேஷ தீபாரதனைகளும் நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை ஆலய அறங்காவலர் கண்ணன், ஆலய நிர்வாகி சுப்பம்மாள் குருந்தலிங்கம் மற்றும் அரசநகரி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

## வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய

# அ.தி.மு.க. சார்பில் திருவாயநல்லூரில் விளையாட்டு உபகரணங்கள் - அன்னதானம்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்



**வாடிப்பட்டி. ஜூலை 27-**
மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அதிமுக மற்றும் வாடிப்பட்டி வடக்கு ஒன்றியம் சார்பில் திருவாயநல்லூரில் அன்னதானம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் மு காளிதாஸ் தலைமை தாங்கினார் இளைஞர் பாசறை மாவட்ட இணைச் செயலாளர் மு காமணிமாறன் வரவேற்புரை ஆற்றினார் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்புரையாற்றினார். முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம் வி கருப்பையா மாணிக்கம் முன்னாள் யூனியன் சேர்மன் ராஜேஷ் கண்ணா மகளிர் அணி லட்சுமி விருகை தர்மர் விவசாய அணி மாவட்ட செயலாளர் ராம்குமார் இணைச் செயலாளர் வாவிட மருதூர் ஆர்.பி. குமார் தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட தலைவர் மதுசூதனன் எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் முடுவார் பட்டி ஜெயச்சந்திர மணியன் புதுப்பட்டி கிளைச் செயலாளர் பாண்டுரங்கன் மகளிர் அணி சாந்தி மாரி முத்து மகமாயி அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் கல்லணை மனோகரன் குரு பார்த்திபன் கச்சை கட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆலயமணி மூர்த்தி சந்திர போஸ் கோட்டைமேடு பாலா தென்கரை நாகமணி மலைச்சாமி கோவில்பட்டி வழக்கறிஞர் அழகர்சாமி வாடிப்பட்டி செந்தூர பாண்டியன் சித்தாலங்குடி ஜெயக்குமார் டிவி நல்லூர் சசிகுமார் மாலிக் துரைப்பாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரம்: தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்



**ராமநாதபுரம், ஜூலை 27-**
ராமநாதபுரத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 492 பேருக்கு பணி நியமன ஆணையினை கலெக்டர் சிம்ரன் ஜீத்சிங் காலோன் வழங்கினார்.
ராமநாதபுரம் முகமது சதக் ஹமீது மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டு, தேர்வு செய்யப் பெற்ற நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-
தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி படித்த இருபாலருக்கும் தனியார்துறையின் மூலம் போதிய வேலை வாய்ப்புகளை பெற்றிடும் வகையில் ஆண்டுதோறும் இரண்டு முறைக்கு மேல் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதில் முன்னணி நிறுவனங்கள் மூலம் பலர் வேலை வாய்ப்பு பெற்று பயன் பெற்றுள்ளார்கள்.
இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாமின் நோக்கம் என்பது படித்து முடித்து வேலைக்காக ஒவ்வொருவரும் பல தனியார் நிறுவனங்களைத் தேடி பல்வேறு ஊர்களுக்கு சென்று வந்த நிலையை மாற்றி உள்@ரிலேயே முக்கிய நிறுவனங்கள் வரவழைக்கப்பட்டு இந்த மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. இதில் மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பை தேடிடும் இளைஞர்கள் இதுபோன்ற முகாம்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் படித்த இளைஞர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கல்வித்திறனுக்கேற்ற வேலைவாய்ப்பை பெற வேண்டும் என்ற நோக்குடன் நான் முதல்வன் திட்டம் தொடங்கப்பட்டு எல்லோரும் பயன்பெறும் திட்டமாக சிறந்து விளங்கி வருகின்றன. ஆண்டுதோறும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. இம்முகாமில் படித்த இளைஞர்கள் பங்கேற்று பயன்பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.
தொடர்ந்து தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் முன்னணி நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 492 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் வாழ்த்தி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் பாபு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மதுகுமார், முகமது சதக் ஹமீது மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மீரா, அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் நாகரத்தினம், மாவட்ட வேலைவாய்ப்பு உதவி அலுவலர் சுந்தரலிங்கம், உதவி திட்ட அலுவலர் அழகப்பன், ராஜாமுகமது, தங்கப்பாண்டி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரம் பகுதியில்

# தி.மு.க. மாணவர் அணியினர் ஓரணியில் தமிழ்நாடு விழிப்புணர்வு துண்டு பிரச்சாரம்



**ஒட்டன்சத்திரம், ஜூலை 27-**
தமிழ்நாடு முழுவதும் திமுக மாணவரணி சார்பில் கல்லூரிகளில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அதன் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள கல்லூரிகளில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனையின்பேரில் கல்லூரி மாணவர்களிடையே ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை இயக்கம் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரச்சாரம் ஒட்டன்சத்திரம் கிறிஸ்டின் பாலிடெக் கல்லூரியில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் திண்டுக்கல் மேற்குமாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.பாண்டியராஜன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மு.தினேஷ்முத்துக்கிருஷ்ணன், துணை அமைப்பாளர் வெ.சுரேஷ்குமார், எஸ்.ஆர்.கே சரண்யா, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர், மாணவர்அணி, இளைஞர்அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதி திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம் ஏ.வெள்ளோடு ஊராட்சி சிறுநாயக்கன்பட்டியில் உள்ள புனித சந்தியாகப்பர் ஆலய 30-ம் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற அன்னதானத்தை அ.தி.மு.க. துணை பொது செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான நத்தம் இரா. விசுவநாதன் ஆலோசனையின் படி மாநில அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என். கண்ணன் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் எம்.ஏ.முருகன், கிளை செயலாளர்கள் வின்சென்ட், அமுல்ராஜ், தாஸ், தேவராஜ் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.**




**கமுதி கோட்டைமேட்டில் உள்ள ரஹ்மானிய கார்டன் மெட்ரிக்பள்ளி, நேஷனல்அகாடமி சார்பில் பெருந்தலைவர் காமராசர் 123-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஓவிய போட்டியில் கலந்து கொண்ட 2-ம் வகுப்பு மாணவி மு.வெ.காசினி நாச்சியார்க்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி ஆசிரியர் பாராட்டினார்.**

# நத்தம் அருகே தேவாங்கு விலங்குகள் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு முகாம்



**நத்தம், ஜூலை 27-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குடகிப்பட்டி அரசு உயர்நிலைபள்ளியில் தேவாங்கு பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்கு ரோட்டரி சங்க துணை கவர்னர் சர்மிளா பாலகுரு தலைமை தாங்கினார்.வனச்சரக அலுவலர்கள் ஆறுமுகம், முருகேசன், ராம்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அழகர்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
சேடோ தொண்டு நிறுவன நிர்வாக இயக்குநர் சோனைமுத்து வரவேற்றார். இதில் தேவாங்கு உயிரினத்தின் வாழ்விடங்களை புத்துயிர் பெற செய்வது மற்றும் வீடுகள், கிராமங்கள் தோறும் மரக்கன்றுகள் வைத்து தேவாங்கு இனங்களை மீட்பது குறித்து கிராம மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசப்பட்டது. தொடர்ந்து தேவாங்கு பற்றிய புத்தகம் வெளியிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. இதில் வனத்துறை ஆராய்ச்சி ஆய்வாளர் மாரியப்பன், நீலகிரிஸ் நிலப்பரப்பு அமைப்பு துணை தலைவர் பூமிநாதன் உள்ளிட்ட வனக்குழு தலைவர்கள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



**அருப்புக்கோட்டை அருகே செட்டிகுறிச்சியில் உள்ள தனியார் மண்டபத்தில் செட்டிகுறிச்சி - பெரியநாயகிபுரம் ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமை முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன் ஆகியோர் பார்வையிட்டனர். இதில் 13 துறைகளின் கீழ் அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இதில் பெரும்பாலான மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. இதில் அரசு அலுவலர்கள், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ், பந்தல்குடி சாகுல் ஹமீது, கொப்பைய ராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், வெங்கடேஷ் மற்றும் தி.மு.க. பிரமுகர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.**



**மதுரை அமெரிக்கன் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் இந்திய தலைமைப் பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன் மாணவி கீர்த்திகாவுக்கு பட்டம் வழங்கினார். உடன் பிஷப் ஜோசப் பிரின்ஸ் பிரபாகரன்,கல்லூரி முதல்வர் பவுல் ஜெயக்கர் உள்ளனர்.**

# சிவகாசி அருகே வெடிவிபத்து: பலி எண்ணிக்கை 4 ஆக உயர்வு

**விருதுநகர், ஜூலை 27-**
விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே ஆண்டியாபுரத்தில் சீனிவாசன் என்பவருக்கு சொந்தமான மாரியம்மாள் என்ற பட்டாசு ஆலையில் கடந்த ஜூலை 21 ஆம் தேதி மருந்துக்கலவையில் ஏற்பட்ட உராய்வின் காரணமாக பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.
இந்த வெடி விபத்தில் ஒரு ஆண் தொழிலாளர் இரண்டு பெண் தொழிலாளர்கள் என மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உடல்கருகி பலியாகினர்.இந்தநிலையில் மேலும் படுகாயமடைந்த மூன்று பேர் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில் மாரியம்மாள் என்பவர் சிகிச்சை பலன் இல்லாமல் உயிரிழப்பு.
இதனால் பலி எண்ணிக்கை நான்காக உயிரிழப்பு. மேலும் நாகலட்சுமி மற்றும் மாரியம்மாள் தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கமுதி அருகே ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம்



**கமுதி, ஜூலை 27-**
ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே திம்மநாதபுரத்தில , உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நேற்று நடைபெற்றது.
கமுதி அருகே திம்மநாதபுரம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில், திம்மநாதபுரம், டிவிஎஸ்புரம், மாவிலங்கை ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இம் முகாமிற்கு மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செல்வி தலைமை தாங்கினார். வட்டாட்சியர் காதர் முகைதீன்,சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் சேதுராமன்,வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் மண்டல துணை வட்டாட்சியர்கள் வெங்கடேஷ்வரன், வேலவன்,ஊராட்சி மன்ற தலைவர் கந்தசாமி,வட்ட வழங்கல் அலுவலர் விஜயா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கார்த்தி,சத்தியேந்திரன் வருவாய் ஆய்வாளர்கள் பிரியதர்ஷினி, பரமேஸ்வரி, கிராம நிர்வாக அலுவலர் சாம்பசிவம், ஊராட்சி செயலர்கள் முருகன், குருமூர்த்தி,சிவக்குமார், முத்துராமலிங்கம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.
முகாமில் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்ப மனு மற்றும் வருவாய்துறை, ஆதிதிராவிடர் நலன், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில், விவசாயத்துறை,மாற்றுத்திறனாளிகள் துறை,தொழிலாளர் நலத்துறை, சுகாதாரத் துறை, தோட்டக்கலை துறை, சமூக நலத்துறை உட்பட பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட மொத்தம் 438 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. இதில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகள், உடனடியாக வழங்கப்பட்டது. மேலும் மின்வாரிய பெயர் மாற்றங்கள் உடனடியாக செய்து தரப்பட்டது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



● தமிழ்நாடு முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று அப்போலோ மருத்துவமனையில் திமுக மண்டல பொறுப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகளை அழைத்து ஓரணியில் தமிழ்நாடு மற்றும் தேர்தல் களப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். இதில் மூத்த அமைச்சர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லை: முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஜூலை 27-

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; தி.மு.க. உடன்பிறப்புகள் களத்தில் ஓய்வின்றி களமாடிக் கொண்டிருக்கும் போது, மருத்துவர்கள் வற்புறுத்தினாலும் எனக்கு மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லை.

உயிராக நம்மை இயக்கும் கழகத்தின் களச்செயல்பாடுகள் குறித்து மண்டலப் பொறுப்பாளர்களிடம் ஆலோசித்தபோது, உறுப்பினர் சேர்க்கையில் 150 தொகுதிகளில் நம் இலக்கை எட்டிய இன்பச் செய்தியை அவர்கள் பகிர, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு குறித்த ஆலோசனைகளை வழங்கி உற்சாகம் பெற்றேன். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## மத வழிபாட்டு தலங்களுக்கு

# மின் கட்டணத்தில் பாகுபாடு ஏதும் இல்லை: தமிழக அரசு

சென்னை, ஜூலை 27-

பொது வழிபாட்டு தலங்கள் அனைத்திற்கும் ஒரே மாதிரியான மின் கட்டணமே நிர்ணயிக்கப்படுகிறது என தமிழக அரசு விளக்கமளித்துள்ளது.

தமிழகத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்கு தமிழக அரசு மின் கட்டணத்தில் பாகுபாடு காட்டுவதாக இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் தனது சமூக தலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரபூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இது கடந்த 2019-ம் ஆண்டில் இருந்தே பரப்பப்படுகிறது. கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் என பொது வழிபாட்டு தலங்கள் அனைத்தும் 'பொது வழிபாட்டு தலங்கள்' என்றே வகைப்படுத்தப் படுகின்றன.

இவை அனைத்திற்கும் ஒரே மாதிரியான மின் கட்டணமே நிர்ணயிக்கப்படுகிறது.

2024-ம் ஆண்டு கட்டண விதிப்பின்படி, கோவில், மசூதி மற்றும் தேவாலயம் உள்ளிட்ட பொது வழிபாட்டுத் தலங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.6.20 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில், முதல் 120 யூனிட்டுக்கு அரசு மானியமாக ஒரு யூனிட்டுக்கு ரூ.3.13 மானியம் அளிக்கிறது. வதந்தியை பரப்பவேண்டாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில்

# கட்டிடக்கலை மாட்சியை புலப்படுத்தும் எழில்மிகு கட்டிடங்கள்: அரசு பெருமிதம்

சென்னை, ஜூலை 27-

முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில் பொதுப்பணித் துறையின் சாதனைகளாக கட்டிடக்கலை மாட்சியைப் புலப்படுத்தும் எழில்மிகு கட்டிடங்கள் அமைந்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறை தமிழ்நாட்டின் வளம் பெருக்கும் கட்டமைப்புகளை உருவாக்கும்-வரலாற்றுச் சிறப்புமிக்க கலைச் சின்னங்களை உருவாக்கும் பெருமைக்குரிய துறையாகும்.

2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், ஓர் ஆண்டு காலத்தில் சென்னை கிண்டியில் ரூ. 240.53 கோடியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை 6 தளங்களுடன் கட்டி 15.6.2023 அன்று திறந்து வைத்தார். கொளத்தூர் தொகுதியில் மொத்தம் 210 கோடியே 80 லட்சம் ருபாய் செலவில் 6 அடுக்குத் தளங்களில் 560 படுக்கை வசதிகளுடன் 6 அறுவை சிகிச்சை அரங்கம்-நவீன ரத்த வங்கி- புற்று நோயியல் பிரிவு- குழந்தைகள் நலப்பிரிவு- நரம்பியல் பிரிவு- மகப்பேறு பிரிவு என்று நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய அனைத்து வசதிகளோடும் மிகப் பிரம்மாண்டமாக உயர் சிறப்பு மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது.

அரியலூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, நாகை, நாமக்கல், உதகை, ராமநாதபுரம், திருப்பூர், விருதுநகர், திருவள்ளூர், ஆகிய 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குத் தேவையான கட்டிடங்கள் ரூ. 4179 கோடியில் கட்டப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் காரப்பேட்டையில் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனை கட்டிடம் ரூ. 218 கோடியில் கட்டப்பட்டுள்ளது. முதல்வர் ஸ்டாலின், திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நினைவாக திருவள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் வகையில் கடல் நடுவில் நாட்டிலேயே முதலாவதாக ரூ. 37 கோடி செலவில் மிகப் பிரமாண்டமான கண்ணாடி இழைப் பாலத்தினைக் கட்டி, 30.12.2024 அன்று திறந்து வைத்தார்.

முதல்வரால் இவை மட்டுமல்லாமல், மேலும் பல புதிய கட்டமைப்புகள் எழுந்த வண்ணம் உள்ளன.

* புதுடெல்லி சாணக்கிய புரியில் ரூ. 257 கோடியில் புதிதாகக் கட்டப்படவுள்ள வைகை தமிழ்நாடு இல்லக் கட்டிடங்கள்.

* கோவை மாநகரில் கட்டப்படும் ரூ. 300 கோடி மதிப்பிலான தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம்.

* திருச்சி மாநகரில் கட்டப்படும் ரூ. 290 கோடி மதிப்பீட்டிலான மாபெரும் கலைஞர் நூலகம் மற்றும் அறிவு சார் மையம்.

* செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு கிராமத்தில் ரூ. 525 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம் முதலிய பொதுமக்கள் பெரிதும் பயன் பெறும் பல்வேறு உயர் தொழில்நுட்பக் கட்டமைப்புகள் கட்டப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



● சென்னை எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் 2022-ல் வந்த பதிவுத்தொகை ரூ.5.89 கோடியில் கட்டப்பட்டு வரும் விடுதியையும், ரூ.53 கோடி மதிப்பீட்டில் 82,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வரும் குழந்தைகளுக்கான பிரத்யேக சிறப்பு பிரிவு கட்டிட பணிகளையும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் வட்டார துணை ஆணையர் கட்டா ரவிதேஜா, இயக்குநர்கள் தேரணிராஜன், லட்சுமி, சுமதி, பொறியாளர் கார்த்திகேயன் உடனிருந்தனர்.

# கார்கில் தியாகிகளுக்கு ஜனாதிபதி, பிரதமர் நரேந்திரமோடி புகழஞ்சலி



புதுடெல்லி, ஜூலை 27-

கார்கில் வெற்றி தினமான 'கார்கில் விஜய் திவாஸின்' 26-வது நினைவு நாளில், போரில் உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1999-ல் பாகிஸ்தானுடன் நடந்த கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்றது. இதன் வெற்றி தினம் ஆண்டுதோறும் ஜூலை 26-ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது.

கார்கில் போரில் உயிர்த் தியாகம் செய்த ராணுவ வீரர்களை நினைவு கூரும் வகையிலும், உயிரோடு இருக்கும் கார்கில் போர் வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் நேற்று 26-வது ஆண்டாக கார்கில் வெற்றி தினம், 'கார்கில் விஜய் திவாஸ்' என்ற பெயரில் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதற்காக ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

" இந்த நாள் நமது வீரர்களின் அசாதாரண வீரம், துணிச்சல் மற்றும் உறுதியைக் குறிக்கிறது.

தேசத்துக்காக அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உயர்ந்த தியாகம் நாட்டு மக்களுக்கு என்றென்றும் ஊக்கமளிக்கும்." என்று தெரிவித்தார்.

பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், இந்த நாள், நாட்டின் பெருமையைப் பாதுகாக்க தங்கள் உயிரை அர்ப்பணித்த இந்தியத் தாயின் துணிச்சலான மகன்களின் இணையற்ற துணிச்சலையும், வீரத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது.

தாய்நாட்டுக்காக அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்ற அவர்களின் விருப்பம் ஒவ்வொரு தலைமுறையினருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். ஜெய் ஹிந்த்!" எனத் தெரிவித்துள்ளார்.

# சமூக ஊடகங்கள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன

## சுப்ரீம் கோர்ட் அதிருப்தி



புதுடில்லி, ஜூலை 27-

"சமூக ஊடகங்களை பலர் தவறாக பயன்படுத்துவதாக சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

பெண் அரசியல்வாதி ஒருவரை விமர்சித்து யூடியூப் சமூக வலைதளத்தில் வீடியோ வெளியிட்ட கேரளா பத்திரிகையாளருக்கு எதிராக சுப்ரீம் கோர்ட் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு, நேற்று (ஜூலை 25) நீதிபதிகள் நாகரத்னா, கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, பெண் அரசியல்வாதி ஒருவரை விமர்சித்து யூடியூப் சமூக வலைதளத்தில் வீடியோ வெளியிட்ட கேரள பத்திரிகையாளருக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

மேலும், நீதிபதிகள் கூறியதாவது: யூடியூப் வீடியோக்கள் நீதிமன்ற செயல்முறைக்கு மாற்றாக இருக்க முடியாது. தீர்ப்பு வழங்குவதற்கு நீதிமன்றங்கள் உள்ளன. யூடியூப் வீடியோ மூலம் கருத்தை திணிக்க முடியாது.

யூடியூப் போன்ற சமூக ஊடகங்களை பலர் தவறாக பயன்படுத்துகின்றனர். சமூக வலைதளங்களில் பேசப்படும் எதிர்மறையான விஷயங்கள் ஈர்க்கின்றன.

ஊழல் எதிர்ப்பு பெயரில் யாருடைய புகழையும் பாதிக்கும் வகையில் செயல்பட முடியாது. விமர்சிப்பது சட்டத்தின் கண்ணோட்டத்தில் தவறானது. ஊழலை எதிர்ப்பதாக கூறி அவதூறு கருத்து பரப்ப சமூக வலைதளங்களை பயன்படுத்தக் கூடாது.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# 17 எம்.பி.க்களுக்கு சன்சத் ரத்னா விருது: மத்திய அரசு அறிவிப்பு




புதுடில்லி, ஜூலை 27-

பார்லிமென்டில் சிறப்பாக செயல்பட்டதற்காக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 17 எம்.பி.,க்களுக்கு சன்சத் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்லிமென்டில் சிறப்பாக செயல்பட்டதற்காக 17 எம்.பி.,க்களுக்கு 2025ம் ஆண்டுக்கான 'சன்சத் ரத்னா' விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி., சுப்ரியா சுலே, பா.ஜ. எம்.பி., நிஷிகாந்த் , உத்தவ் தாக்ரேவின் சிவசேனா கட்சியைச் சேர்ந்த அரவிந்த் சாவந்த் ஆகியோருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

அதேபோல, 3 பார்லிமென்ட் கூட்டங்களிலும் சிறப்பான பங்களிப்பை கொடுத்த நான்கு சிறப்பு நடுவர் விருதுகளும் வழங்கப்படுகின்றன. ஒடிசா பாஜ எம்.பி., பர்த்ருஹரி மகதாப், கேரள எம்.பி., என்.கே. பிரேமச்சந்திரன், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா சுலே மற்றும் சிவசேனா கட்சி எம்.பி., ஸ்ரீரங் அப்பா சந்து பார்னே ஆகியோருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் 16வது (2014-2019) லோக் சபாவிலிருந்து தொடர்ந்து சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிற விருதுகளை பெறும் எம்.பி.,க்கள், ஸ்மிதா உதய் வாக் (பாஜ), நரேஷ் மாஸ்கே (அரியனா), வர்ஷா கெயிக்வாட் (காங்கிரஸ்), மேதா குல்கர்னி (பாகுஜன்), பிரவீன் படேல் (பாஜ), பித்யுத் பரண் மகதோ (பாஜ), திலீப் சைகியா (பாஜ).



● சென்னை கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூ.19.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் நவீன சந்தையின் முன்னேற்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். உடன் கூடுதல் தலைமைச்செயலாளர் காகர்லா உஷா, செயல் அலுவலர் அ.சிவஞானம், துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக் உள்ளனர்.